தென்மொழி

தந்தை செல்வா பெயரால் தழைக்கும் தமிழீழம் !

எடுப்பு

தந்தை செல்வா தம்பெயர் சொன்னால்
தவறாமல் தழைக்கும் தமிழீழம் தன்னால் ! (தந்தை)

தொடுப்பு

சிந்தையில் எரியும் உரிமைச் சுடர்விளக்கம் !
செழுந்தமிழ் மணக்கும் விடுதலை முழக்கம் ! (தந்தை)

முடிப்பு

முந்தையர் நாட்டின் முழுஉரி மைப்போர்
மூண்டிடக் கொளுத்திய வாய்மையின் திருப்பேர் !
தந்தையர் ஆண்ட தமிழீழத் தாயகம்
தமிழருக் காக்கிய வரலாற்று நாயகம் ! (தந்தை)

குலைநடுங் காத கொள்கையின் குன்றம் !
கூர்மை நோக்கிலோ உயர்அற மன்றம் !
மலையகம் இணைந்த மணித்தமி ழீழம்
மாய்க்கும் பதவியை உதறிய வேழம் ! (தந்தை)

செயல்திறம் மிகுந்த சிந்தனை வெள்ளம் !
செருக்கும் மறம்விளையும் தூய்நெறி உள்ளம் !
அயலவன் சிங்களன் ஆளுமை ஒதுக்கியே
அன்னைத் தமிழீழ நாட்டினைப் புதுக்கிய (தந்தை)

(31-3-81 - அன்று தமிழீழத் தந்தை மூதறிஞர் செல்வநாயகம் அவர்களின் 83-ஆவது பிறந்த நாள் நினைவாக எழுதப்பெற்றது)

சுவடி : 17 ஆசிரியர் பெருஞ்சித்திரனார் விலை
ஓலை : 8 உருபா : 1-2

நமக்கு வந்த மடல்கள்.

0:827: பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். தென்மொழிக் குடும்பத்தின் மூத்த தலைவர் பாவாணர் ஐயா அவர்களின் மறைவு கேட்டு மிகவும் வருந்தினேன். தாமே தமிழாய் விளங்கி, தமிழ் நிலத்தில் உலவிய அரிமா தன் மூச்சை அடக்கிக் கொண்டுவிட்டது. 'அகரமுதலித் திட்டம்' நிறைவேறுமா ? இந்த ஐயம் ஒருபுறம் என்னைத் துடிக்க வைக்கிறது. மறைமலையடிகளுக்குப்பின் தேவநேயர் ஒருவர் தமிழுக்கு அரணாயிருந்தார். தேவநேயருக்குப்பின் தமிழினத்தின் உயிர்த்துடிப்பாய் இயங்கி வரும் தங்களின் மொழியின நாட்டு நலத்தின் அக்கறையை அறிவுடையோர் போற்றுவரா? முன்னுள் அழகப்பா கல்லூரித் **தமிழியக்கப்பாசறை** மறவனாகிய நான் எங்கிருந்தாலும், – ஆங்கிலம் பயின்று அதனைப் பிழைக்கப் பயன் படுத்தினாலும் - ஆக்சம் சேர்த்துக் கொண்டிருப்பது அன்னைத் தமிழுக்கே ! வாழ்க தென்மொழி ! அன்புடன்

— நாட்டுச்சாலை தமிழன்பன்.

ஆங்கிலத்துறை — சாகர் பல்கலைக் கழகம். (ம. பி.)

0:828 : மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் மறைவு குறித்து எய்திய துன்பம்-துயரம் இயப்ப வொண்ணாதது. அவர்களின் இழப்புக்குத் தமிழகம் என்ன ஈடு கொடுக்க வியலும்? அப்பேரறிஞருக்கு ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் ஏற்பட்ட அவமதிப்பைச் செய்தித்தாள்கள் வழி அறிந்து மனம் வெதும்புகிறது. மேலும் அம் மாநாட்டில் தமிழ்மொழிக்காக உண்மையாக, தூய தொண்டாற்றிய அறிஞர்கள், ஆய்வாளர்கள், பாவலர்கள், கலைஞர்கள் இன்னபிற சான்றோர் பலரின் தொண்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்காது, கட்சிக் கண்ணோட்டத்துடன் மொழிக்கு இழுக்கு செய்தவர்களுக்கு, செய்து கொண்டிருப்பவர்களுக்குப் பட்டம், பதவி, சலுகை இன்னபிற காட்டி வரும் இன்றைய தமிழரசின் போக்கு கண்டிக்கத் தக்கதே. தமிழினம் என்று விழிப்புக் கொள்ளுமோ ? இங்ஙன், தங்கள் தொண்டு என்றும் சிறக்கப் பாடுபடும் தொண்டர்களில் ஒருவன். அன்பன், **— வீர. சுப்பையன். c/o 56 APO.**

0:829: பேரன்பு நிறை ஐயா, வணக்கம். திரு. ம.கோ. இரா. தலைமையில் உள்ள அ. தி. மு. க. அரசு தமிழ்மாநாடு என்ற பெயரில் 12 கோடி உருபாக்களைச் செலவு செய்திருக்கிறது. இதனால் யாருக்கு என்ன நன்மை வந்து விடப் போகிறது. பேருந்துகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்றும நடுவண் பேருந்து நிலையம் என்றும் எழுதுவதால் தமிழ் வளர்ந்து விடுமா ? **தினமணி**, **தினமலர்**, **தினத்தந்தி**, நாளிதழ்கள் கலப்புத் தமிழ் எழுதித் தமிழ் அழிப்பு வேலை செய்கின்றன. **முரசொலியும்** கலப்புத் தமிழ்தான் எழுதி வருகிறது. தமிழ் இன விடுதலை கேட்கின்ற **விடுதலையும்** கலப்புத் தமிழைத் தான்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

‘கெஞ்சுவதில்லை பிறர்பால்;
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

தென்மொழி

இலக்கிய இதழ்

சுவடி: 17 ஓலை: 8
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
மீனம். தி. பி. உ0கஉ-
மார்ச்சு-ஏப்பிரல்-'81.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்:
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
தென்மொழி. ந. முத்துக்குமரனார் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு

மதுரையில் நடந்து முடிந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கென தமிழக அரசு ஏறத்தாழ 13 கோடி உருபாக்களைச் செலவழித்துள்ளது. மாநாட்டின் மொத்தப் பயனை நோக்க, இத்தொகை மிகமிக அதிகம் என்றே சொல்லுதல் வேண்டும். “மூள்ளு முனைமேலே மூன்றுகுளம் வெட்டி வச்சேன்; இரண்டு குளம் பாழ்; ஒன்றில் தண்ணியே இல்லே''-என்னும் பழைய நாட்டுப்புறப் பாடலுக்கேற்றபடி, உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கென, அறிஞர்கள் கலந்து கொள்ளுமாறு தொடங்கப் பெற்ற, இம்மாநாட்டுத் தொடர் இறுதியில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளும் மாநாடாக விரிவடைந்தும் ஆரவாரமாகவும் போனது, நாம் ஒரு வினையை எங்கே தொடங்கி எப்படி நழுவ விட்டு, எங்கே கொண்டு போய் முடிக்கின்றோம் என்பதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கச் செய்திருக்கின்றது. மாநாட்டிற்காக ஏற்பட்ட செலவு, ஏதோ அள்ளித் தெளிக்கப்பட்ட செயல்களுக்காகப் பயன்பட்டு விட்டதே என்று எண்ணும் பொழுது மிகுந்த வருத்தம்

ஏற்படவே செய்கின்றது. மாநாட்டின் ஒவ்வொரு செயலும் நன்கு திட்டமிடப் பெற்றுச் செப்பமாக வகுக்கப் பெற்று, ஒழுங்கு படுத்தப் பெற்றதாகத் தெரிய வில்லை. மாநாட்டுக்கு ஒரு கிழமைக்கு முன்பு கூட, மாநாட்டுச் செய்திகளைப் பற்றி, குறிப்பாக மாநாட்டில் நடை பெற விருக்கும் நிகழ்ச்சிகள், அழைக்கப் பெற்ற அறிஞர்கள், அவர் களுக்கு ஒதுக்கப் பெற்ற பணிகள், அவர்கள் செய்யப் பெற வேண்டிய ஆராய்ச்சிகள், சொற்பொழிவுகள் முதலியன வரையறுக்கப் பெற்ற தாகத் தெரியவில்லை. அரசு அதிகாரிகள் பலர் இது பற்றிக் கேட்கப் பெற்ற பொழுது, அவர்கள் தங்களுக்கும் அவை பற்றி யெல்லாம் ஒன்றும் தெரியப்படுத்தப் பெறவில்லை என்பதாகவே நமக்குக் கூறி வந்தனர். (யார் தெரியப் படுத்துவது, யாருக்குத் தெரிய வேண்டுவது என்பது பற்றி யெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை.) ஆனால் ஏறத்தாழ ஐந்து பெரிய தொழிற்சாலைகளை அமைத்து, ஐம்பதி னாயிரம் தொழிலாளர்களுக்கு நிலையான வேலை வாய்ப்புகள் ஏற் படுத்திக் கொடுக்கப் போதுமான ஒரு பெருந்தொகைச் செலவில், உலகமளாவிய ஒரு மொழியாராய்ச்சி மாநாடு, இப்படி அறக்கப் பறக்க, வெறும் ஆரவாரமாகச் செய்யப் பெற்று விட்டதே, என்று நினைக்கும் பொழுது நம்மால் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

மாநாட்டுக்கான விளம்பரச் செலவுகள் ஏறத்தாழ ஐந்து இலக்கம் என்று கூறப் பெறுகின்றது. ஆனால் வந்த விளம்பரங்களைப் பார்க்கும் பொழுது, இது மிகவும் குறைத்துக் கொடுக்கப் பெற்ற புள்ளி விளத்தம் போல் தெரிகிறது. மாநாட்டின்பொழுது, ஒவ்வொரு செய்தித் தாளிலும் - செய்திகள் இல்லாமல் வெறும் படமாக மட்டும் - முழுப்பக்க விளம்பரம் - திரைப்பட விளம்பரம் போல் - தொடர்ந்து கொடுக்கப் பெற்று வந்ததே - இதெல்லாம் தேவைதானா - என்பதை அரசளவில் அறிவுள்ளவர்கள் சிந்தித்துப் பார்த்திருந்தால் இன்னும் நல்ல பல விளைவுகளை ஏற்படுத்த அத்தொகை பயன் படுத்தப் பட்டிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது. மாநாடு நடக்கப் போவதாகவும் பின் தள்ளிவைக்கப் பெற்றதாகவும் இரண்டு மூன்று முறை ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அறிவிப்புகள் வந்திருந்த அளவில், ஏற்கனவே மாநாட்டை எதிர் நோக்கியிருந்த மக்களுக்கு,மேலும் இதுபோன்ற ஆரவாரமான விளம்பரங்கள் எரிச்ச லூட்டவே செய்திருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. விளம்பரமே மாநாடு என்று எண்ணுகின்ற அளவில், இவ் வேண்டா வினைகளால் ஏற்பட்ட செலவுகளை, அமைச்சர்கள் தங்கள் கைகளி லிருந்து செய்திருந்தாலும் கூட, அது கண்டிக்கத் தக்கதே! பொது மக்கள் பணம் என்பதாலும், எவரும் கேட்க முடியாமல், வாயைப் பிளந்து கொண்டுதான் வயிறெரிந்து போக வேண்டியிருக்கும் என்ப தாலும், அரசு இவ்வகையில் தண்ணீர் பட்ட பாடாய்த் தாராளமாகப் புதையலெடுத்துச் செலவழித்திருப்பது போல், செலவழித்திருக்

கின்றது! திரைப்படங்களுக்காகிலும் இத்தகைய விளம்பரச் செலவுகள் ஒரு நோக்கத்தை நோக்கிச் செய்யப் படுகின்றன. ஆனால், இங்கு எதை நோக்கிச் செய்யப்பெற்றன என்று கண்டு பிடிப்பதே இயலாததாகி விட்டது. மாநாட்டின் தொகுபயனும் அவ்வாறு அமைந்து விட்டது இன்னும் வருத்தத்தைத் தருவதாகும். 'அரசன வீட்டுக் கோழிமுட்டை, அம்மிக்கல்லையும் உடைக்கும்' என்பது போல், அரசு எடுத்துச் செலவு செய்தால் யாரும் கேட்க முடியாது' என்று ஆகி விட்டது.

இனி, உலகத் தமிழ் மாநாடு என்பது வெறும் பட்டிமன்றங்களும், பாட்டரங்குகளும், நாடகங்களும், பொய்க்கால் குதிரை, கரக ஆட்டங்களும், கண்காட்சிகளுந்தாமா? இவை தேர் திருவிழாக்களில் தாமே நடத்தப் பெறுகின்றன. இங்குமா அவை நடைபெற்றாகல் வேண்டும்? இந்தத் திட்டமிடுதல் வேலைகளை எந்த அறிஞர் குழு செய்ததோ, தெரிய வில்லை. 'வாணவேடிக்கைக்காரர்கள் விழாச் செய்தால், வழியிலுள்ள பந்தலெல்லாம் பற்றி யெரியும்' என்பதுபோல் பட்டிமன்றங்களிலும் பாட்டரங்கங்களிலும் கலந்து, பேசிப்பாடிப் பழகிக் காழ்ப்பேறிப்போன வாயாடிகளும், கையாடிகளும் செய்த நிகழ்ச்சிகள் போல் இருந்தனவே தவிர, அறிஞர்கள் திட்டமிட்டுச் செய்ததுபோல் தெரியவில்லை. நாம் கேள்விப் பட்ட அளவில், அரசுச் செயலகத்தில் குடிகொண்டு வாழும் சிட்டுக்குருவிகள் கூட, உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சி அமைப்புகளில் அதிகாரம் செலுத்தின, கைகள் நிறைய காசுகள் பெற்றுப் பைகள் நிறைய அடைத்துக் கொண்டு மாநாட்டுப் பந்தலை நோக்கிப் பறந்து சென்று, நினைதத்தற்கெல்லாம் அக்காசுகளை வாரி யிறைத்தன என்பது உண்மையாக விருக்குமானால், இதைவிடக் கொடுமையும், முழுமூடத்தனமுமான செயல் வேறு இருக்க முடியாது. இவ்வளவு ஆரவாரப் படுத்தியதற்கு, அத்தனைப் பணத்தையும் ஒரு மூட்டையாகக் கட்டி நட்ட நடுக் கடலில் வீசி யெறிந்திருக்கலாம். தமிழின் பெயரால் இம் முடிச்சு மாறித்தனம் நடந்திருக்க வேண்டிய தில்லையே! இவற்றால், தமிழ் மொழிக்கு ஓர் எள்மூக்கத்துணைப் பயனுவது விளைந்ததென்று எந்த அமைச்சராவது விளக்கிக் காட்ட முடியுமா?

உலகத் தமிழ் அறிஞர்களை யெல்லாம் ஒன்றாகக் கூட்டுவதும், அவர்கள் இதுவரை தமிழ்மொழிக்குச் செய்திருக்கும் ஆக்கங்களை யெல்லாம் உலகறிய வெளிப்படுத்துவதும், அவர்கள் செய்து கொண்டிருக்கும் புத்தாக்கங்களுக்கு அரசு ஊக்கங் காட்டி உதவி யளிப்பதும், இலக்கியம், மொழியியல், அறிவியல், உளவியல், விண்ணியல், மண்ணியல், மாந்தவியல், தொடர்பான துறையறிஞர்களை யெல்லாம் வகை வகையாகப் பகுத்து, அவர்களடங்கிய பேரவை நிகழ்ச்சிகளை அமைத்து, அவர்களை இதுவரை ஆராய்ந்த உண்மை

களைத் தமிழில் வெளிப்படுமாறு செய்து, இனிமேல் அவர்கள் செய்ய விருக்கின்ற ஆய்வுகளுக்கு வழிவகை காட்டி உதவி, தமிழியல் அறிவு உலகமெல்லாம் பரவவும், ஆங்காங்கு வேரவிடவும் தழைக்கவும் செய்திருக்க வேண்டிய ஒரு மாநாடு, வெறும் வெற்று ஆரவார நிகழ்ச்சிகளுக்குப் பல கோடி உருபாக்களைக் கொட்டி, இப்படிப் பாழடித்து விட்டதே என்று எண்ணும் பொழுது நெஞ்சத்தவலம் மிகுகின்றது. இனி நாம் கூறும் கருத்துகளைச் செவிமடுப்பார் யார்? கற்பாறைகளில் பட்டு எதிரொலிக்கும் கருத்துகளாகவே, நம் சொற்கோலங்கள் அழிவு பட்டு விடுகின்றனவே, என் செய்வது ?

இனி, நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள, அமைச்சர் காளிமுத்துவிடமிருந்து முறைபான அழைப்பு, செயலக

க. காளிமுத்து
உணவுத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை—600 009

நாள் ....

ஓலை.எண். 84961/உ.த.மா/80, நாள்: ...11.80.

பெருந்தகையீர்,

வணக்கம்.

பொருள்: ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு - மதுரை 1981 - பொதுநிலைக் கருத்தரங்கு.

...

1981 சனவரித் திங்கள் 4-ஆம் நாள் முதல் 10-ஆம் நாள் வரை மதுரையில் நடைபெறும் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகளாக ஆய்வுக் கருத்தரங்கு, பொதுநிலைக் கருத்தரங்கு, அங்காடி ஊர்வலம் ஆகியன அமையும். வெற்றி ஆய்வுக் கருத்தரங்கம் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நிகழும். தமிழ்மக்கள் அனைவரும் பங்கு பெறும் வகையில் பொதுநிலைக் கருத்தரங்கினை மதுரைப் பந்தயத் திடலில் "மூவேந்தர் அரங்கில்" பட்டி மண்டபம், கவியரங்கம், கருத்தரங்கம், சிந்தனை மேடை ஆகிய இலக்கிய நிகழ்ச்சிகளாக நடத்தக் கருதியுள்ளோம். இப்பொதுநிலைக் கருத்தரங்கில் பின்வரும் நிகழ்ச்சியில் தாங்கள் பங்கு பெற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறேன். தாங்கள் வருவதற்கான வழிச் செலவையும் தங்குகையும் நாங்களே மகிழ்வுடன் ஏற்போம்.

தலைப்பு: மாந்தர் தோற்றமும் தமிழர் மரபும்
கருத்தரங்கம் - தமிழர் தோற்றம் பொலிவு
நாளும் - நேரமும் - இடமும்: 5.1.1981 பிற்பகல் 2 மணி

தங்கள் மறுமொழியை ஆவலோடு விரைவாக எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

தலைவர்
பொதுநிலைக் கருத்தரங்கு அமைப்புக் குழு

பெறுநர்:

பாவலரேறு . பெருஞ்சித்திரனார்

அதிகாரி ஒருவர் வழி நமக்கு வந்தது. நாமும் அழைப்புப்படி பொது நிலக் கருத்தரங்கில் - நமக்குத் தேவையில்லாத ஆராய்ச்சித் தலைப்பே எனினும், அதில் - உரையாற்றுதற்கு ஒப்புதலளித்தோம். எவ்வாறேனும், தலைப்பு ஏதானாலும், அதை யொட்டிச் சில கருத்து-களைத் தெரிவித்து விட வேண்டும் என்று நாமும் அணியமாகி யிருந்தோம். ஆனால் மாநாட்டுக்கு இரு நாட்களுக்கு முன் செய்தித்தாள் களில் அறிவிக்கப் பெற்றிருந்த நிகழ்ச்சி நிரலில் நம் பெயர் இல்லை. எனவே, மாநாட்டில் நம்மால் கலந்து கொள்ள இயலவில்லை.

மாநாட்டிற்கு அழைப்பு வராதிருந்தாலும் நாம் கவலைப்படப் போவதில்லை. ஆனால், அழைப்பு விடுத்த அமைச்சர் நம் முன்னாள் தென்மொழியன்பராக விருந்தவர். அழைப்பு விடுத்த பின் அவர் மனத்தை மாற்றியமைத்த பெருமகனார் - தமிழ்த் தொண்டர் - யார் என்று தெரியவில்லை. ஏதோ, நாம் தமிழ்நாட்டுப் பிரிவினை கேட்ப வராம்; 'மிசா'ச் சட்டத்தின் கீழ் ஓராண்டு சிறையில் இருந்தவராம். இவையெல்லாம் நம் தகுதியின்மையாம். இப்படி, நாம் மாநாட்டில் புறக்கணிக்கப் பெற்றதற்குக் கரணியம் கூறப் பெற்றது. இஃது, எவ்வளவில் உண்மையோ, அந்த அரசு அதிகாரிகளுக்குத்தான் தெரியும்! எப்படியோ, நாம் மாநாட்டில் புறக்கணிக்கப் பட்டோம். ஆனால் ஒன்று, தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில், இங்குள்ள அமைச்சர்களுக்கு உள்ள தொடர்பையும் தகுதியையும் விட, ஊர் வலங்களைக் காணும்படி அழைக்கப் பெற்ற இந்திரா காந்தி அம்மை யாருக்கிருக்கும் உரிமையை விட, நமக்கு இதில் உள்ள உரிமை மிகுதி, தகுதி மிகுதி, தொடர்பு மிகுதி, தமிழ்த் தொண்டும் மிகுதி - என்கின்ற உண்மையை மட்டும் இன்றுள்ள அரசு மறந்து விட வேண்டாம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இறுதியாக, மாநாடு என்கின்ற பெயரால் சில ஆரவார நிகழ்ச்சி களை நடத்தி, ஏராளமான பொதுமக்கள் சொத்தை வீணடித்து விட்டது அரசு! அத்துடன், நம் அரும்பெறல் மொழிஞாயிறு பாவாணரையும், இம் மாநாட்டில் நாம் பறிகொடுத்து விட்டோம். இனி, நாம் என்ன செய்து, என்ன எழுதி, இவ்விழப்புகளை ஈடு கட்டி விட முடியும்? ஒன்றும் செய்ய வியலாமல் கையற்று நின்று, நாம் மேற்கொண்ட கடமைகளையேனும் இனித் தொடர்ந்து, சிறு அளவி லேனும், செய்து வருவதே, நாம் தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் செய்கின்ற தலையாய தொண்டாகும் என்று உறுதி கொள்கின்றோம்.

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. (குறள் : 670)

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. (குறள் : 667)

— பெருஞ்சித்திரனார்.

மாணவர்களின் மலிந்த போக்குகள்.

அண்மையில் ஓரிரண்டு உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடைபெற்ற இலக்கிய மன்ற நிகழ்ச்சிகளில் நாம் பங்குகொண்டு சிறப்புரையாற்ற நேர்ந்தது. அக்கால் மாணவர்களிடை ஏற்பட்டு வரும் இழிந்த போக்குகள் சிலவற்றைக் கண்டு உண்மையிலேயே பெரு வருத்தம் கொண்டோம். இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்த மாணவர்கள் நிலையிலும், இப்போதுள்ள மாணவர்கள் நிலையிலும் எவ்வளவு வேறுபாடுகள்! நினைப்பதற்கு நெஞ்சம் நோகின்றது.

இக்கால் உள்ள மாணவர்கள் அறிவு வேட்கையும், உணர்வுத் துடிப்பும் மிகுந்தவர்களாகக் காணப் பெற்றாலும், அவர்களிடம் பண்பாட்டுணர்வு மிகவும் தாழ்ந்துள்ளது. அளவுக்கு மீறிய கலையுணர்வு மிகுந்து காணப் பெறுகிறது. கலையுணர்வு அளவுக்கு மீறி வளருமானால் பண்பாடு இழியும்; ஒழுக்கவுணர்வு தாழும். கலையுணர்வற்ற வெறும் அறிவுணர்வு மட்டும் மிகுந்து தோன்றுமானால், மக்களிடையில் கொடுமை யுணர்ச்சிகள் தலையெடுக்கும்; அன்பிணைவு அற்றுப் போகும். எனவேதான், ஓரின மக்கள் பண்பட்ட நாகரிக முதிர்வு பெறவேண்டுமானால், அவர்களிடையில் கலையுணர்வும் அறிவுணர்வும் சமநிலைப் பட்டதாக வளர்க்கப் பெற வேண்டும். இதற்கு அரசே முழுப் பொறுப்புடையதாகும்.

நாட்டில் இன்று அளவுக்கு மீறிய திரைப்படக் காட்சிகள், கலை, நாடக நிகழ்ச்சிகள், விளையாட்டுப் பொழுது போக்குகள், ஆடல் பாடல்கள் கட்டு மீறி வளர்ந்து தோன்றுகின்றன. போதாக்குறைக்கு இந் நிகழ்ச்சி பற்றிய கருத்துரைகள் படக்காட்சிகள் முதலியவற்றை உடனுக்குடன் வெளிப்படுத்தும் வானொலி, தொலைக்காட்சி, கிழமை, மாத, நாளிதழ்கள் முதலியவை எல்லை மீறி மக்களிடம் தொடர்பு கொள்ளும் கருவிகளாகப் போய்விட்டன. இவையனைத்தும் காட்சியளவில் மறைந்து போகும் கலை நிகழ்ச்சிகளை, அழகுற வண்ண வடிவில் அச்சிட்டு விலைபோக்கி, மக்களின் - இளம் மாணவர்களின் - உள்ளங்களில் கருத்தளவில் தொடர்ந்து பதித்து வருகின்றன. எனவே, இன்றுள்ள மாணவர்களின் அன்றாட வாழ்க்கையில் கல்வியும் அறிவும் இடம் பெறுவதைப் போல், பல மடங்கு அளவில் கலையுணர்வும் பொழுதுபோக்குணர்வும் இடம் பெற்று, அவர்களின் துடிப்பும், விசைப்பும், ஆர்வமும், அங்காப்பும் நிறைந்த இளமை உணர்வுகளை வேறெதிலும் இடம் பெயர விடாமல் கவ்விப் பிடிக்கின்றன. அதன் பயனாக, மாணவர்களின் உரையாடல்களில், நினைவலைகளில், இயக்க நிலைகளில் நூற்றுக்கு எண்பது பங்கு கலையுணர்வுகளே மிகுந்து தோன்றி, அவர்களைப் பாழாக்குகின்றன. இளமையும் வளமையும் கொழுமையும் நிறைந்த அவர்கள் நாடி நரம்புகளில் கலையுணர்வோட்டமே மிகுந்து தோன்றுவதால், பாலியல் தொடர்பான இயற்கையின் மறைவுணர்வுகள், அவர்களின் குருதியோட்டத்துடன்

குமிழியிட்டுப் பொங்கி, எம்பிப் பாய்ந்து, பெருங்குதிரை யாற்றலொடு, பெருகி வழிகின்றன. அவர்களின் எண்ணங்கள், கருத்துகள், செயல்கள் முழுவதும் பாலியல் உணர்வுடனேயே கிளர்ந்து வெளிப்படுகின்றன. அறிவுணர்வு வலிகுன்றிப் போன நிலையில், அதையும் துணைசேர்த்தவாறு, அவர்கள் கலையுணர்வில் தலை மூழ்குகிறார்கள். எனவே, நல்லோரின் வல்லுரைகளை அவர்களின் செவிகள் ஏற்றுக் கொள்வதில்லை; பெற்றோரின் அன்புரைகள் அவர்களுக்கு வேப்பங்காய்களாய்க் கசக்கின்றன. ஆகவே, வினைகள் வேறுபடுகின்றன.

நல்லவை எல்லாஅந் தீயவாம்; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

— என்னும் திருவள்ளுவத் தெளிவுரை இவ்விடத்துத் தேர்வுரையாகிப் போகிறது.

ஒரு நாட்டின் ஒழுக்க வளர்ச்சி அரசையே பொறுத்துள்ளது, என்பதைத் தமிழ்ச் சான்றோர் உறுதிப் படுத்துவர்.

'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' — (புறம். 312)

என்னும் கூற்று அதனை வலியுறுத்தும். அரசைக் கைப்பற்றியவர் நாட்டின் நல்லுணர்வு வளர்ச்சிக்கு உறுதி பயப்பனவற்றில் முனைந்து கருத்துச் செலுத்துதல் வேண்டும். இனி, 'கலைஞர்களே, அரசர்களானால், அரிதாரம் பூசுவோர்களே அமைச்சர்கள்' - என்னும் நிலையில், நாம் சொல்ல என்ன இருக்கின்றது? எப்படியோ, நாடு எல்லா நிலைகளிலும் கீழ்மையையே நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. அதற்கு இன்றுள்ள மாணவர்களே சான்று. நாற்றையே பூச்சியடித்தால் பயிர்கள் விளைவது எங்ஙன்? இன்றுள்ள அரசுதான் விடை சொல்லுதல் வேண்டும்!

— **பெருஞ்சித்திரனார்.**

உலகத்தமிழ் மாநாட்டில் சிறைப் பிடிக்கப் பெற்ற மூன்று தென்மொழி மறவர்கள்!

மதுரையில் நடந்த கடந்த 5-ஆவது உலகத் தமிழ் மாநாட்டிற்குத், தென்மொழி ஆசிரியர் **பாவலரேறு** அவர்களை அழைக்கப் பெற்றுப் பின் தவிர்க்கப் பெற்றது குறித்து, உலகத் தென்மொழி அன்பர்கள் சார்பில் வெளியிடப் பெற்ற அறிக்கைகளைப் பந்தையத் திடலிலும், பல்கலைக் கழகக் கருத்தரங்கிலும், பொதுமக்களிடையிலும் பேராளர்களிடையிலும் பரப்பியதற்காகத் தென்மொழி அமைச்சர், **அழ. இளமுருகன்** அவர்களையும், தென்மொழி அன்பர்குழுச் செயலர் **சோ. ஆற்றலரசு** அவர்களையும், பாவலரேறு அவர்களின் இளைய மகன் **மா. பொழிலனையும்,** காவலர்கள் கடந்த 8-1-81 இல் தளைப்படுத்தி, சேலம் நடுவண் சிறையில் வைத்திருந்து, 30-1-81 இல் பிணையலில் விடுவித்தனர். அவர்கள் மேல் போட்ட வழக்கு இன்னும் அதிகார முழுமையில் நீக்கப் பெறாமல் உள்ளது. ஆர்வமும் துடிப்பும் கொள்கையுரனும் கொண்ட அவ் விளைஞர்கள் மூவரையும், அவர்கள் செயல்திறனுக்காகத் தென்மொழி மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறது.

அரட்டலும் மிரட்டலும்

ஓர் அரட்டல் : கடந்த 8-1-1981 வியாழனன்று இரவு, திடுமெனக் காவல் துறையினர் 'தென்மொழி'க்கு வந்து அச்சகத்தைத் திறக்கச் சொல்லிப் பாவலரேறு அவர்களை உசாவுதல் செய்தும், அச்சகத்தில் தேடுதல் நோட்டம் (Searching) இட்டும், 'தென்மொழி' சுவடி 17 ஓலைகள் 1, 3-5 ஆகிய இதழ்களைத் தேடி எடுத்துப் பறிமுதல் செய்து கொண்டனர். இந்த ஆய்வு, 2 மணி நேரத்துக்கு மேல் நடந்தது. (அதிகாரிகள் மிகப் பெருந்தன்மையாகவும், மதிப்புடனுமே நடந்து கொண்டனர்.) 'தென்மொழி இயக்க' அறிவிப்பு பற்றிய உசாவு தலுக்கு, பொறுப்பாசிரியர் அவர்கள் 'தென்மொழி'யின் மொழி-இனம் -நாடு பற்றிய நம் முப்படிக் கொள்கைகள் பற்றியும், நாம் இன்று ஈடுபட்டுள்ள தன்னுய்வு பற்றியும் தெளிவாகவும், உறுதி புலப்படவும் அமைவுடன் எடுத்து விளக்கினார்கள். அவ் விளக்கம் பற்றி வியப்பு கலந்த 'மகிழ்வு'ம் 'நிறைவு'ம் தெரிவித்து விட்டு அவர்கள் விடை பெற்றுக் கொண்டனர்.

'தென்மொழி'யின் தனித்தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையைக் கரணியங் காட்டி அரசு தனக்கு விருப்பமான கால - நேரங்களில், வழக்குத் தொடுத்து இதழைத் தடைப் படுத்தவோ; அச்சகத்தை மூடச் செய்யவோ (அதன் உரிமைப் பதிவு எண்ணையும் குறித்துக் கொண்டு போயுள்ளனர்), பறிமுதல் செய்யவோ ; அல்லது பொறுப்பாசிரி யரையே சிறைக்குள் வைப்பதைச் செய்வதற்காகவோ; அல்லது செய்யக் கூடும் என்று அச்சுறுத்தி அரட்டி வைப்பதற்காகவோ, இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக நம்மால் உணர முடிகின்றது.

ஒரு மிரட்டல்! : அன்றே மதுரையில் திருவாளர்கள் மா. பொழிலன் அழ. இளமுருகன், சோ. ஆற்றலரசு ஆகிய மூவர் சிறைப்படுத்தப் பட்டனர். பொறுப்பாசிரியர் பாவலரேறு அவர்களை மாநாட்டிற்கு அழைத்து விட்டுப் பின் நீக்கிவிட்டதைக், கண்டித்து, ஒரு துண்டறிக்கை, வெளியிடப் பட்டிருந்தது. இந்த இரு நடிவடிக்கைகளும், செய்திகளாக, பரவலாக எல்லா நாளிதழ்களிலும் வெளி வந்துள்ளன. 'தென்மொழி' அன்பர்களிடை ஒரு மனக் கொந்தளிப்பை ஏற்படுத் தியுள்ளன. — **செய்தி : தென். மறை. நித்தலின்பன்.**

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அந்தமான் செலவு

''தென்மொழி'' இதழின் பொறுப்பாசிரியர், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் **''அந்தமான் தென்மொழி மன்ற'** அமைப்பாளர் களின் அழைப்பிற் கிணங்க ஏப்ரல் திங்கள் 15-ஆம் பக்கல், கப்பல் வழி அந்தமான் சென்று, 27-ஆம் பக்கல் திரும்ப விருக்கின்றார்கள். ஆசிரியருடன், பாவலர் **குமர நடவரச ஈவப்பனும்** உடன் செல் கின்றார். தென்மொழி ஐயாவின் செந்தமிழ்ச் செலவு சிறப்புற்றமையு மாக!

— **அமைச்சர்.**

உலகத் தமிழ் மாநாடு நமக்கு உணர்த்திக் காட்டின உண்மைகள்!

— தென்மொழி மறை. நித்தலிங்கன்

பழங்குமரித் தமிழ்க் கண்டத்தின் தொன்மதுரைக்குப் பின் எழுந்த தென்மதுரை; தென்-பாண்டி நாட்டின் தலைநகரமாகிய நான் மாடக் கூடல்; அக் கூடல் மாநகரத்திலே, **ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு,** கோலஆரவாரமான கேளிக்கை, கிளுகிளுப்புகளுடன் தமிழோசை முழங்க நடைபெற்று முடிந்தது. (சில பயன்மிகு ஆக்கங்களும் இருக்கத்தாம் செய்தன.) அதை நடத்தியவர் யார்? நேற்றைய திரையுலகத்தின் 'புரட்சி' நடிகராக விருந்து இன்றைய தமிழ்நாட்டின் 'புரட்சி'த் தலைவர் ஆகிய முதல் அமைச்சர் **'எம். சி. ஆர்.'**!

இந்த மாநாட்டை எதற்காக நடத்தினார் இவர்? நெஞ்சத்தில் வைத்துப் போற்றி வந்த **தமிழ் மொழியை** நினைந்தா? அல்லற்பட்டு, அலமந்து நிற்கும் இன்றைய தமிழனை (அல்லது தமிழச்சியை!) எண்ணியா? வெள்ளப் பாழும், வேனல் தரிசுமாய் உரிமைகள் அற்றுக் கிடக்கும் தமிழ்நாட்டை மனத்திற் கொண்டா? இல்லை; இல்லவே, இல்லை! இருக்கவும் முடியாது! நேற்றைய அறிஞர் அண்ணாவின் இளவல்; தந்தை பெரியாரின் பாசறை மாணவர்; இன்றைய மேடைப் பேச்சின் மாமன்னன்; தமிழனுக்கென்று கிடைத்த சூழ்ச்சித் திறம் மிகுந்த ஒரே ஓர் அரச தந்திரி; கொடுத்த உறுதியும் எடுத்த முடிவும் எப்படிப்பட்டன வாயினும், அவற்றை இறுதி வரையில் காப்பாற்றிக் கடைபிடிக்கும் வல்லமை யுடைய தன்மையர்; ஒப்பந்தம் செய்து கொள்ளும் பிறவிப் பகைவனும் (அல்லது, பகைவியும்!), நம்பத் தகுந்த உரன்வலி மிகுந்தவர்; தமிழ் இனத்தின் ஒருமைத் தலைவர்; (ஆனால் தம் பெயரின் முன்னால் 'டாக்-டர்' என்னும் பீற்றல் பட்டத்தை ஒட்டவைத்துக் கொண்டு இயங்கும்) கலைஞர் மு. கருணாநிதி அவர்களை நினைத்தும், அவருடைய அழிவை மறவாமல் கருத்தில் கொண்டுமே தான்! இந்த உண்மை, இந்தத் தமிழ்மொழியை-இனத்தை-நாட்டைப் பற்றிய அரித்தெடுக்கும் மாளாக் கவலைகளினால் காழ்ப்பேறிக் காய்த்துக் கிடக்கும் நமது மண்டையின் மீது, ஆணி வைத்து அறைந்து ஏற்றி அடித்து இறக்கினாற் போன்று, வன்மையாக உணர்த்தப் பட்டுள்ளது.

இன்றைக்கு ஆட்சியில் உள்ளவர்கள் ஒன்றை மட்டிலும் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மக்களை 'மதிப்புரட்டு' பண்ணி மயக்கி விட்டதால், அரியணையில் ஏறி அமர்ந்திருக்கும் நீங்கள், தமிழறிந்து தமிழனுக்காக வினையாற்றிவரும் ஓர் அறிவாளரை உங்களின் அதிகார மமதையால் எவ்வளவு வேண்டுமானாலும் அவமதிப்புச் செய்துகாட்டி, உங்கள் ஆணவப் போக்கை நிலைநாட்டிக்

கொள்ளுங்கள்! ஆனல், 'தென்மொழி'யையோ, அதன் பொறுப்பாசிரியர் உள்ளிட்ட மறவர் கூட்டத்தையோ உங்களை ஒத்த அரசியல்காரர்கள் என்று கருதிவிட வேண்டாம். இந்த நம் அமைச்சர்களானாலும் அல்லது வேறு எவரே ஆனாலும் சரி. நமது மண்டையினுள் புகுந்து, அதன் மூளையைச் சலவை செய்துவிட முடியாது. அப்படியே செய்தாலும், 'முன புதைவுண்டு' இன்று மீண்டுள்ள எம் உள்ளத்தின் முத்தமிழ்த் துடிப்பினை — விடுதலை வேட்கையை இவற்றுக்கு அடிப்படையான இறைமைத் தமிழ் உயிர்ப்பை ஓர் இம்மியளவு கூட அடக்கி ஆண்டுவிட முடியாது; தொட்டுத் தாக்கி விட இயலாது. 'தென்மொழி' உருவாக்கி வரும் அருந்தமிழ் மறவர்கள், வாழ்வு நலன்களுக்காக நத்தித்திரியும் இரப்பாணிகள் அல்லர்; பட்டங்களுக்காக ஏங்கிக் கிடக்கும் 'பரதேசி'களும் அல்லர். 'தென்மொழி' அணி, தமிழகத்தின் விடுதலைப் போரணி! புலிப்படைத் தாஅணி! எங்களை, உங்களின் ஆணவத் தடி கொண்டு எழுப்பிப் பார்த்திடத் துணிந்து விடாதீர்கள், என்று கேட்டுக் கொள்கின்றோம்.

அரசியல் தலைவர்கள் சிலருடைய வாழ்க்கை வேண்டுமானல், உங்களுடையதைப் போல் வழுக்கல் நிறைந்ததாகலாம்; ஒளிவு மறைவுகள் மலிந்ததாகலாம்! ஆனல், பாவலரேறு பெருஞ்சித்திரனர்ன் வாழ்க்கையில் எந்த 'வழு'க்கலும் இல்லை; நேரவும் நேராது! அவருடைய 'முப்படித் தமிழ்ப்பெரும் கொள்கை' என்றைக்கும் நரைத்துப் போகாது! அதற்கு முதிர்ச்சி உண்டே தவிர, மூப்பு வாராது! வானத்தே தோன்றும் மதியம் போன்று வெளிப்படையானது, அவரது தொண்டு வாழ்க்கை. அவரும் அவருடைய தமிழ்நலங் கொழிக்கும் பேருள்ளமும் மாந்தர் யாவாக்குமே பொதுவானவை. அவருக்கு எந்தத் தனிப்பட்ட சாதி-மத-கட்சிச் சார்போ விருப்பமோ கிடையாது. இவற்றை அனைவர்க்கும் நினைவூட்டிக் கொள்கின்றோம்.

நம் பாவலரேறு அவர்கள், அறிவறிந்த புலமை சான்றவர். பெரும் பாவலர். ஏறுபோன்ற செந்தமிழ்ப் பீடு நடையில், தூய தென்றமிழ்ச் சொற்கோவைகளினல், வான்நின்று பெய்யும் மழை மாரி போல் அழகார்ந்த — பொருள் செறிந்த - ஆயிரக் கணக்கான பாடல் வரிகளின்மூலம், தூங்கப் படுத்துவிட்ட இததொன்மைத் தமிழ் இனத்தை, தட்டி எழுப்பித் தன்மானம் ஊட்டி வரும் சீற்றம் மிகுந்த அரிமா. வஞ்சிக்கப் பட்டிருந்த வஞ்சிப் பாவினத்திற் கென்று ஒரு 'மகபுகு வஞ்சி'யும்; அற்றைக் கழக நடையை மீட்டுக் காட்டுதற்கு ஒரு 'நூறாசிரிய' மும் ('தமிழ் நானூறு'ம்); அன்றும்-இன்றும் மேலை நாடுகளிலுங் கூடக் கண்டிராத முழுமை முதற்சிறப்பும் நிறைவனப்பு நேர்த்தியும் தோன்றும் படிக்கு ஒரு 'கனிச்சாறு' தொகுதியும் படைத்தளித்த இலக்கிய வரிமா! கேட்போரின் அறிவு மயங்காது, உணர்வு பேதுறுது, பகுத்தறிவோடு மெய்யறிவை விளக்கி மெய்ப்

பொருள் காட்டும் துளங்கிய மெய்யறிவர். திருவள்ளுவப் பேரா சானின் திருக்குறளுக்குத் தீர்ந்த மெய்யுரை கண்டு எழுதி வரும் பெற்றியர். 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' இதழ்களின் வாயிலாகப் பல ஆயிரம் தமிழ் மொழி-இன-நாட்டு விடுதலைப் படைமறவர்களை உரு வாக்கித் திரட்டி வரும் அருவினை மாட்சியர். இறுதியாக, அத்தென் குமரி முத்தமிழ் மொழிக்கும், இனத்திற்கும், நாட்டிற்கும் என்று, தம்மையே-தம் குடும்பத்துடன்-ஒப்படைத்து வாழ்ந்து வரும், பெரியாரையும் விஞ்சும் பெருந்தொண்டர்.

இத்தகைய நம் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள், கால் நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக, தமிழின முன்னேற்றங் கருதி, உழைத்து உழைத்து ஓடாகிப் போன பின்பும், பெரும் பாடாற்றித் தேய்ந்து, தாமே தமிழாகத் தோய்ந்து விட்ட பின்னரும், தமிழ் அறிஞர் உலகமே கண்டு அஞ்சிப் போற்றும் அவருக்கு இந்தக் கி பி. 1981-இல், தமிழ்நாட்டு மதுரையில், நடைபெறும் இந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் இடம் இல்லை; அஃதாவது, 'ஆசை காட்டி' மறுக்கப் பட்டுள்ளது!

மாநாட்டிற்குப் பத்தே நாட்களுக்கு முன்பு ஓர் அ. இ. அ. தி.-மு. க. அமைச்சரின் மடற்றாளில், பொதுநிலைக் கருத்தரங்கில் கலந்து கொள்ளக் கேட்டு அழைப்பு வருகின்றது. (பொறுப்பாசிரியர் அவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேண்டும் என்று விரும்பி, மதுரை மாநாட்டுச் செயலகப் பொறுப்பாளர் சிலரும், சென்னை அரசு தலைமைச் செயலகத்தில் இருக்கும் பொறுப்பான அதிகாரியர் சிலரும், அண்ணா தி. மு. க. நாளிதழ் ஆசிரியர்கள் சிலரும் வேண்டிக் கொண்டதன பேரில், இவ் வழைப்பு அனுப்பப் பட்டதாக நமக்குத் தெரிய வருகின்றது.) நம் அறிவுப்புலம் சற்றே காவல் சோர்ந்திருந்த நிலையில், நாமும் அழைப்பிதழை உறுதியானது என்று நம்பி, நம் இசைவைத் தெரிவித்து விடுகிறோம். ஆனல், பின், மாநாட்டிற்கு முந்தின நாள், மதுரை செல்ல எல்லாப் புறப்பாடும் ஏற்பாடாகிக் கொண்டிருக்கையில் செய்தித்தாள் வழி அவரது பெயர் நிகழ்ச்சி நிரல் பட்டியலில் இருந்து எடுபட்டு விட்டது' என்று தெரிய வருகிறது. அது பற்றிய விளக்கத்தை நமக்கு வேண்டிய ஓர் அரசு ஊழிய அன்பர் நேரில் வந்து விளக்குகிறர்! முறைப்படி ஏதுமில்லை. 'நடுவண் அரசிலிருந்து தடை' என்ற ஒரு சாக்குப் போக்குக் காரணமும் சொல்லி அனுப்பப் பட்டிருக்கின்றது. பாவலர் அவர் களுக்கு எப்படி இருக்கும் சொல்லுங்கள்! சொல்லக் கேட்டறியும நமக்குத் தாம் எப்படி இருக்கிறது? வெள்ளை உள்ளத்துடன் கள்ளமறி யாது இறங்கி வரும் நமக்கு – நம் 'தென்மொழி'யின் ஆசிரியருக்கு-எப்பேர்ப்பட்ட 'பரிசில்' தரப்பெற்றுச் 'சிறப்பி'க்கப் பட்டுள்ளோம், பார்த்தீர்களா?

அழைக்காமல்—நம்பிக்கை ஊட்டி நம் வினைப்பாடுகளில் தடை ஏற்படுத்தி அலைவு செய்யாமல்—விட்டிருந்தால், தாழ்வில்லை. புறக்கணிப்பு’ என்ற ஒரு பொதுவான குறைதான் இருந்திருக்கும். ஆனால், இதுவோ, அழைப்பு விடுத்து இசைவையும் பெற்றுக் கொண்ட பின்னர், இப்படி இழிவு சேரும்படி அவமதிப்புச் செய்வதை, எப்படி நம்மால் வாளா அமைந்து பொறுத்துக் கொள்ளக் கூடும்?

நம்மை அழைத்தால், அந்த அழைப்பை இறுதிவரை செல்லும்படி ஆகும்படி வைத்திருக்க மாட்டாதவர்கள் எல்லாம் எதற்கு அழைக்க எண்ணங் கொள்ளவேண்டும், முதலில்! போயும், போயும்-(பாவாணரையா விற்கும் சரி, பாவலரேறு விற்கும் சரி, அவர்களுக்கு ஏலாத—சிறப்பு குன்றிய) ஒரு கருத்தரங்கில் கூடக் கலந்து கொள்ளச் செய்ய முடியாதவர்களுக்கு எல்லாம், எதற்கு இந்த வேலை? இப்படிப்பட்டவர்கள் எல்லாம் என்றைக்கு, நமக்கு, தமக்குரிய மேல்நிலை ஆராய்ச்சிப் பேரரங்குகளில், வெளிநாட்டு நல்லறிஞர்களுடன் ஒக்க இடம் தந்து, தகுந்த பயனைப் பெறச் செய்துவிட முடியும்? மானக் கேடு! இந்நிலையில், இவர்களெல்லாம் தனித்தமிழ் மீட்பர் மறைமலை அடிகளார்க்கும், விடுதலைப் பாவேந்தர் சுப்புரத்தினனார்க்கும் எப்படிச் சிலைகள் வைப்பார்கள்? தமிழ் நாட்டின் உட்பகுதியாக இருக்க வேண்டிய புதுவை மாநிலத்தின் முதல்வரை எப்படி வரிசை வைத்து அழைப்பார்கள்? ஆந்திராக் காரரையும், கேரளாக் காரரையும், கருநாடகப் பார்ப்பனரையுந் தாம் அழைப்பார்கள்.

தமிழ் மாநாட்டை உலகையே கூட்டி நடத்துவது எதற்கு? தமிழ் அறிஞர்களும் புலவர்களும் உவப்பத் தலைக்கூடி, தம் அறிவு நுட்பத்தாலும் நுழைபுல மாட்சியாலும் மொழி-இன முன்னேற்றங்களுக்கு ஆவன கண்டறிந்து, தெளிவூட்டி வழிகாட்டத் தானே? பின், நமக்கு ஏன் அதில் இடமில்லை? இருக்கக் கூடாது? நாம் எதில் குறைச்சல் ஆகப் போய் விட்டோம்? ஓர் 20 நிமைய நேரம், இவர்கள் தரும் அரசியல் கலந்த ஆரவார மேடையில் ஏறி நின்று, என்னதான் தொண்டை கிழியக் கத்தித் தீர்த்தாலும், அப்படி என்ன விளைந்து விடுமாம்? உடனே, தில்லியார்க்குத், தமிழ்நாட்டைத் தனியாகப் பிரித்துத் தந்துவிட வேண்டிய வந்து விடுமா? இங்கு இருப்பவர்களெல்லாரும் பாலத்தீனப் படைமறவர்களா? அல்லது, இஃது என்ன, ஓர் அசாமா, நாகாலாந்தா, இலடாக்கா? துணிவற்ற தமிழர்களின் புன்மைத் தமிழ்நாடு தானே? நடுவண் அரசிற்கு அப்படி என்ன நட்ட நடுவில் ஒரு நடுக்கம் வந்து விட்டது, நம்மைக் கண்டு? நம் எண்ணப்படி, ‘நம்மவர்’களே ஏதாவது நெஞ்செரிந்துபோய், தம் ‘புரட்சித் தலைவரி’டம் இல்லாததையும் பொல்லாததையும் எடுத்தோதி இந்தத் ‘தடை’யைப் பிறப்பிக்கச் செய்திருக்கலாம் என்றே படுகிறது.

‘தென்மொழி’யைப் பொறுத்த வரையில், அஃது எதையும் என்றும் ஒருதலைச் சார்பான நிலையில் யாரிடமும் எதிர்பார்த்ததும்

இல்லை; எதிர் பார்க்கப் போவதும் இல்லை. எந்த அரசியல் கட்சியையும், தலைவரையும் நல்லன பற்றிப் பாராட்டி ஊக்குதலையும் அல்லன பற்றிக் கண்டித்து இடித்துரைப்பதையுமே செய்து வந்துள்ளது. பேராயம் (காங்கிரசு) ஆனாலும், தி. மு. க. ஆனாலும், அனைத்து இந்திய அண்ணா தி மு. க. ஆனாலும் அதற்கு ஒன்றே. நம் மனத்தின் கண், என்றைக்கும், தமிழ்-தமிழன்-தமிழ்நாடு பற்றிய நலன்கள் தாம் மேலாங்கி நடுவுநிலைமை ஏற்றிருக்கும். வேறு எந்தக் குறுக்கடி எண்ணங்களுக்கும் நினைப்புகளுக்கும் அங்கு இடம் கிடையாது. இதை ம. கோ. இரா. அவர்கள் விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டார்; அல்லது தவிர்த்துவிட்டார். அவர் கூட இருப்பவர்களும் அவருக்கு உணர்த்தி விடவும் மாட்டார்கள்!

இதனால்தான், அருந்தமிழ்ப் புலமை சான்றோரை, மதித்துப் போற்றிடும மாண்பையும் எம். சி. ஆர். நினைக்க மறந்து விட்டார்; வேண்டாதன கருதி, பழி வரும்படி பிழையாக நடந்து கொண்டு வருகின்றார். சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன்தான், முரசு கட்டிலின் மேல் அறியாமல் ஏறித் துயன்ற மோசிகீரனார் என்னும் தண்டமிழ்ப் புலவர் பெருந்தகைக்குக் கவரி வீசிக் கண்விழிக்கக் காத்திருந்தான் என்பதை, அதே பழஞ்சேர நாட்டிற்கு உரியவரான எம். சி. ஆர். தம் நினைவிற் கொள்ளவில்லை; மேற்கூறிய புறநானூற்றுக் காட்சியை, மாநாட்டு மலரின் முகப்பில் படமாகப் போட்டுப், பிறருக்கு நினைவூட்டும் ஏற்பாட்டினைச் செய்வித்ததுடன் நிறுத்திக் கொண்டார்! இந்த நிலைமையில், நம்மால் ஒன்றை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அஃதாவது கலைஞராக இருந்தால், (மறைவாக இருந்தேனும் நமமை அறவே புறக்கணித்திருப்பாரே யன்றி,) இப்படி அழைப்பு விடுத்துப் பின்னால் முகத்தில் கரி பூசிவிடத் துணியமாட்டார் என்பதே.

தி. மு. க. வில் இருக்கும் (பெரும் பாலார்க்கு) தமிழன், தமிழ் இனம் என்னும் பொதுப்பார்வையே கிடையாது. எவருடனாவது, இணைந்து இயங்குவது என்றாலும், சேர்ந்து வினையாற்றுவது என்றாலும் அவர்கள் அவரை, 'நம்ம ஆள் தானா இவர்?' என்றும், 'நம் தலைவரை ஏற்றுக் கொள்பவரா?' என்றுமே ஆய்வு செய்வார்கள்; கணித்துப் பார்ப்பார்கள். அந்தக் கணிப்பில் அவர், 'அவர்கள்' ஆளாக, அவர்கள் தலைவருக்கு உகந்த வராகத் தெளிந்து தென்பட்டாலன்றி, அவரைச் 'சேர்த்துக் கொள்ள' மாட்டார்கள்! அவருக்கு வேறு எத்தகைய நிறைகள் இருந்தாலும் அதையெல்லாம் கருத மாட்டார்கள். அவை, அவர்களைப் பொறுத்த மட்டில், தேவையற்றவையே. இதுவே அவர்கள் வழிவழியாக மேற் கொண்டுவரும் வழக்கமாகும்.

அத்தக் கழகத்தின் மாற்றுப் பதிப்புத்தானே, இந்த அ.தி.மு.க. வும். அப்புறம் எப்படி அவர்களிடம் நாம், நடுவுநிலைமையையும் நயன் மையையும் எதிர் பார்க்கலாம்? உண்மையான, தமிழ் உணர்வும் இன உணர்வும் அற்ற நிலையில் இவர்களுக்கு எங்கிருந்து உறுதிப் பாடு வரும்? அஞ்சாமை வளரும்? துணிவு பிறக்கும்?

எப்போதும் கவடாகவும், கரவாகவுமே தம் பகைமை எண்ணங் களையும் அழிம்புச் செயல்களையும் நம்மிடையில் செயல்நடத்திக் கொள்ளும் ஆரியப் பார்ப்பனர்கள் கூட, இன்றைக்கு, தம் எதிர்ப்பு களையும் எரிச்சல்களையும் வெளிப்படையாகப் புறங்காட்டிக்கொண்டு, தெருவிலிறங்கிப் பூச்சாண்டி காட்டி மல்லுக்கு அழைக்கும் அளவிற்கு நாம் இளக்காரமாகப் போயுள்ளோம். நமக்கு நாமே பகையாகவும் வஞ்சகமாகவும், உண்மையின்றியும், நன்றியற்றும் ஒருவரையொரு வர் அடித்து வீழ்த்திக் கொண்டு இருந்து வந்தால், என்ன நேரிடும்? இப்படித் தமிழ் இனமும் நாடுமே கொத்தடிமை பூண்டிருக்க வேண்டித் தான் வந்து விடியும். பார்ப்பானுக்கும் வடவனுக்கும் கும்பிடுபோட்டுக் குறுகி நடந்து, தனது நாட்டில், தானே, ஒளிந்து திருடித் தின்று உயிர் பிழைக்க வேண்டித்தான், நிலைகள் அமையும்.

தில்லிக்காரருடன், நம் தலைவர்கள் தாங்கள் ஆட்சியில் பிழைத் திருக்க வேண்டிச் செய்து கொள்ளும் கமுக்கமான வாய்ப்பேச்சு ஒப்பந்தங்களுக்கு நாம் இறையாகிப் போக வேண்டியது தான்! மதுரை போய் மாநாட்டிற் கலந்து கொள்ள வக்கேது? இந்திராவின் பாதுகாப்புக்காக எழுந்துள்ள புதிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை, எம்.சி.ஆர். தமது பாதுகாப்பிற்காகத் 'தென்மொழி'யின் மீதும் நம்மீதும் பயன்படுத்தி, நமக்குக் 'கொட்டடி' வாழ்க்கையைத் தான் பரிசிலாக அளித்தருள்வார்.

எனவே, எந்த முன்னாள் 'தென்மொழி' 'முத்து'களாலும், 'இராசா'க்களாலும், ஏதும்—என்றைக்கும் ஒரு துகள் அளவுகூட தமக்கோ, 'தென்மொழி'யின் உயிர்க் கொள்கைகட்கோ ஒன்றும் செய்து தந்துவிட முடியாது. இவர்கள் சார்பில், 'அன்பு'த் தூது வந்து, நடையாய் நடந்து கால்மெலியும் 'அரசர்' களாலும், எதுவும்-காட்டிக் குறைத்துச் சொல்லியாவது 'இணைத்து' விட முனைந்த போதிலும்- நமக்கும் பெற்றுத் தந்துவிட முடியாது' என்பது வெளிப்படையாகி விட்டது. வெல்க செந்தமிழ்த் தாயுரம்! கெடுக பகைவனின் நகை வலம்! ○

"தென்மொழி இயக்க" உறுப்பினர்க்கான படிவம் அனுப்பிவிட்டீர்களா? தமிழ் மொழியை, இனத்தை நாட்டைக் காக்கப் புறப்படும் இயக்க மறவர்களாக நீங்கள் ஏன் இருக்கக்கூடாது?

ஐந்து உலகத்தமிழ் மாநாடுகளும் அறிஞர் பாவாணரும்.

புலவர் இறைக்குருவனார்.

முதல் உலகத்தமிழ் மாநாடு மலேசிய அரசின் ஆதரவோடு கோலாலம்பூரில் 1966-இல் நடைபெற்றது. ஆராய்ச்சி நடத்துவதற்கு அந்நாள் முதலமைச்சர் பத்தவச்சலத்தின் மகள் சரோசினி வரதபபன் உட்பட யார்யாரெல்லாமோ அழைக்கப்பெற்றுச் சென்றார்கள்.

அம்மாநாட்டிற்குப் பாவாணருக்கு அழைப்பில்லை. அவரை அழைக்குமாறு எவரும் பரிந்துரைக்கவுமில்லை. உலகத் தமிழ் மன்றத்தை நிறுவியரும் அம்மாநட்டை முன்னின்று நடத்தியவரு மான அப்பர் தனிநாயக அடிகள் வையாபுரி வழிப்பட்ட தெ பொ. மீ.யின் மாணுக்கர். அவருக்குத் துணைநின்ற வி. ஐ. சுப்பிரமணியம் முதலியோரும் அவரனையாரே. ஆகவே மறைமலை வழியினரான பாவாணர் அழைக்கப்பெறுதது வியப்பன்று.

பாவாணரா, அவர் யார் ?

சிங்கை சென்ற மாநாட்டுப் பொறுப்பாளர்களையும், தமிழ் நாட்டு ஆட்சிப் பொறுப்பாளரையும் ஆங்குள்ள தமிழன்பர்கள் பாவாணர் ஏன் மாநாட்டில் இடம்பெறவில்லை என்று வினக்கணை களால் துளைத்தெடுத்தனர். அவ்வவரும் பட்டும் படாமலும் பேசியும் தட்டிக்கழித்துச் சென்றனர். தமிழ்நாட்டின் பேராயக் கட்சித்தலைவர்க ளுள் ஒருவரும் பின்னுளில் சட்டமன்ற எதிர்கட்சித் தலைவராக அமர்ந்தவரும் கம்பராமாயணப் பற்றுளரும், தமிழறிஞராகக் கருதப் பெற்றவருமான பி. சி கருத்திருமன் அவர்கள், 'பாவாணரா? அவர் யார்? அப்படி யாரும் இல்லையே!' என்று கூசாது மறுமொழி கூறி ஒருவாறு கூறித் தப்பிவந்தார்.

1968-இல் சென்னையில் நடைபெற்ற 2-ஆவது உலகத்தமிழ்மாநாடு தமிழையே முதலீடாகக் கொண்டு பேசியும் எழுதியும் மொழிஇன உணர்ச்சிகளை மக்களிடையே பரப்பிவந்த தி. மு. க ஆட்சிப் பொறுப் பேற்ற புதிதில் அதன் முழு ஆதரவோடு முதல் மாநாட்டினும் பற் பல மடங்கு விரிவாக நடத்தப்பட்டதாயினும் பாவாணர் புறக் கணிக்கப் பெற்றார்.

ஆராய்ச்சியாளர்கள் யாரும் பாவாணரை அறியாதிருந்தனர் என்று கூறமுடியாது ஆட்சிப் பொறுப்பில் இருந்த தி. மு. கழக முன்னணித் தலைவர்கள் யாரும் பாவாணரின் அறிவுத்திறனையும் ஆராய்ச்சி நலனையும் அறியாதவர்களும் அல்லர். பாவாணரின் ஒப் பியன் மொழிநூல் அக்காலத் தி. மு. க. மேடைப் பேச்சாளர்கட்குப் போர்வாளாக விளங்கிய தென்பது அவர்களே ஒப்புக் கொண்ட உண்மை. ஆயினும் பாவாணருக்கு அம்மாநாட்டில் தகுதியான பங்கு வழங்கப்படவில்லை!

மாநாடு நெருங்கிக் கொண்டிருந்த நாளில் மலர்க்கட்டுரைத் திருத்தாளர் பட்டியலில் அச்சிடப்பட்ட 22-பெயருக்குப்பின் 23-ஆவது பெயராகப் பாவாணர் பெயர் கையால் எழுதிச் சேர்க்கப் பட்டது; சில கட்டுரைகள் திருத்தத்திற்கு அவரிடம் கொடுக்கப் பட்டன. அத்துடன், மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியின் பொழுது, எவ்வகையான முன்னறிவிப்புமின்றி அன்பர்கள் சிலரால் மாநாட்டு மேடைக்கு இட்டுச் செல்லப் பெற்ற பாவாணருக்குப் பொன்னாடை போர்த்தப் பெற்றது. அவ்வளவே!

பாரிசில் நடைபெற்ற 3-ஆவது மாநாடோ (1970), ஈழத்தில் நடந்த 4-ஆவது மாநாடோ (1974) பாவாணர் ஒருவர் இருக்கிறார் என்பதைக் கண்டு கொள்ளவே இல்லை. தமிழறிஞர்களெல்லாரும், தத்தம் ஒட்டிக் கொண்டால் போதும் என்றிருந்தனர். இவை இரண்டும் அயல்நாடுகளில் நடந்தமையின் அவை பாவாணரைப் புறக்கணித்தமை பொதுவகையில் வெளிப்படவில்லை

2-ஆவது உலகத்தமிழ் மாநாடு நடந்த 12-ஆண்டுகட்குப்பின் ஐந்தாவது மாநாடு மீண்டும் தமிழ்நாட்டில் கூடியது!

தென்மொழியின் தொடர்ந்த வலிந்த முயற்சிகளாலும், உலகத் தமிழ்க் கழக அமைப்பாலும் பாவாணர் நூல்கள் பரவியதோடு அடுத் தடுத்துப் பலநூல்கள் வெளிவந்தன! செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிக்கென அரசுச்சார்பில் ஒரு தனித்துறை அமைக்கப் பெற்றது. **பெருஞ்சித்திரனாரின்** இருவகை எழுத்து நடையான் மட்டுமன்றி, அவர்தம் எழுச்சிமிகு நாவன்மையாலும் பாவாணர் முன்புபோல் எளிதில் புறக்கணிக்க முடியாத அளவிற்குப் அவர் புல மக்கள் நிலையிலும் பொதுமக்கள் நிலையிலும் உயர்ந்து நின்றார்.

ஆயினும் இம்மாநாட்டிலும் அதன் தலையாய பகுதியில் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பாவாணர்க்கு இடமளிக்கப்படவில்லை. பட்டிமன்றம் பாட்டரங்கம் போலும் ஆரவார மேடையான பொது நிலைக் கருத்தரங்கில் (கல்லாச்சிரூரின் இடையூறுகட்கிடையில்) அவர் பேச நேர்ந்தது.

அன்று தமிழ் உணர்வுப் பிழம்பாக நின்று ஏறத்தாழ 75 நிமையம் உரையாற்றினர். அதுவே அவர்தம் இறுதிப் பேருரையாகவும் அமைந்தது.

பாவாணரின் உடல்நலிவும் மாநாட்டு நிகழ்ச்சிகளுள் ஒன்றாக அமைந்து விட்டமையானும், மாநாட்டின் நிறைவையொட்டி அவர் தம் மறைவும் அமைந்து விட்டமையானும், அஃது அரசினரின் பார் வைக்கும், செய்தி நிறுவனங்களின் பார்வைக்கும் உரியதாயிற்று. இல்லையாயின் அவர் ஏனைப் பொது மாந்தருள் ஒருவர் போலவே மறைந்திருப்பார். ○

பெருஞ்சித்திரனார் பாடல்கள் (கனிச்சாறு)

(முதல் இரண்டு தொகுதிகள்)

பண்டாரகர் ப. கிருட்டிணன் க. மு.

(**'தமிழ்ப்பணி'** இதழில் வெளிவந்த மதிப்புரைத் திறனாய்வுக் கட்டுரை இது. தென்மொழி அன்பர்களுக்காக இங்கு வெளியிடப் பெறுகிறது)

பாரதிதாசன் வழிமுறைப் பாவலர்களில் தலைசிறந்தவர் பாவலரேறு பெருசித்திரனார் ஆவார். அவர் முகத்தில் தெரியும் பெருமிதம், மிடுக்கு, முற்காட்சி ஆகிய அனைத்தும் அவர் பாடல்களிலும் வெளிப்படுகின்றன. வெறுக்கையே பாடலின் வெளிப்பாடாகக் கொண்டு எழுதும் புதுப் பாடற்காரர்கள், மெட்டுகளுக்கேற்பச் சொற்களைப் போட்டுப் பாடலையும் கருத்தையும் கொலை செய்யும் திரைப்படப் பாவலர்கள், மொத்தத்தில் பாடற் கொள்கையும் / கொள்கைப் பாடலும் இல்லாமல் எழுதும் சமகாலப் பாவலர் கூட்டத்தில் பெருஞ்சித்திரனார் தலைசிறந்த பாவலராகத் தலைநிமிர்ந்து நிற்கிறார்.

'பெருஞ்சித்திரனார் பாடல்கள்' முதலிரண்டு தொகுதிகளில், முதல் தொகுதியில் 152 பாடல்களும் இரண்டாம் தொகுதியில் 115 பாடல்களும் ஆக 267 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவை ; 1. தமிழ், 2. இந்தி எதிர்ப்பும் இன எழுச்சியும், 3 நாட்டுரிமை, 4. பொதுமை உணர்வு, 5. இளைய தலைமுறை ஆகிய ஐந்து பிரிவுகளில் அடங்கியுள்ளன. இவ்வைந்து பகுப்புகளையும் ஊடுருவிச் செல்லும் இழைகள் மூன்று ஆகும். அவை 1. தமிழ்மொழி 2. தமிழ் இனம், 3. தமிழ்நாடு ஆகியன. இவற்றுள் தமிழே ஏனைய இரண்டையும் ஆட்சி செய்து முன் நிற்கிறது. இப்பாவலரின் உயிர்க் கொள்கை—பாடற்கொள்கை எஃது என்பது தெளிவாகின்றதன்றோ?

மேற்கண்ட கொள்கைகளில் ஊற்றம் பெற்றிருந்த எமது சமகாலப் பாவலர்களில் பலர் இன்று வேறு வேறு திசைகளில், சென்று கொண்டிருக்கின்றனர். காரணம் என்ன? பல காரணங்களினால் இக் கொள்கைகள் 'இருசீர்' கெட்டுப் போனதால்தான். இருப்பினும் இப் பாவலர் மட்டும் விடாது உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார். ஏன்? பிற பாவலர்கள் மேற் காட்டிய கொள்கைப் பேருந்தில் வழிப்போக்கர்களாகவே இருந்தனர். இவர் மட்டுமே வண்டியோட்டியாக இருந்துள்ளார். பேருந்து பழுதடைந்த பொழுது வழிப்போக்கர்கள் பாதுகாப்புத் தேடி வேற்றிடம் சென்று விட்டனர். ஆனால் கடமை உணர்வுள்ள இந்த வண்டியோட்டி மட்டுமே குருதியை வெயர்வையாக்கிப் பேருந்தைச் செப்பனிட்டுத் தம்மை ஈகம் செய்து கொண்டிருக்கிறார்.

ஒரு பாவலனின் உறுதியான கொள்கைப் பிடிப்பை அவன் தொடக்கக் காலப் பாடல் முதல் வாழுங்காலக் கடைசிப் பாடல் வரை வைத்து அறிதல் வேண்டும். பெருஞ்சித்திரனாரின் இரண்டு பாடல்

தொகுதிகளிலும் உள்ள பாடல்கள் 1952-1978 வரை வெள்ளி விழா ஆண்டுக்கும் மேற்பட்ட காலக்கட்டத்தினை உடைய பாடல்களாகும். இக் காலக் கட்டங்களில் பாவலர் படிப்படியாகத் தம் கொள்கையில் உரமும், உறுதியும், இறுக்கமும், நெருக்கமும் பெற்றிருக்கின்றாரே யன்றி, நெகிழ்வு என்பது கிஞ்சிற்றும் இல்லை. இத்தகைய கொள் கைப் பிடிப்புடையவர்தாம் கொள்கைப் பாவலராகத் திகழ முடியும். குமுகாயச் சிக்கல்களையும் குமுக இழிவுகளையும் பாடலின் பாடு பொருளாகக் கொண்டு பாவன்மை ததும்பப் பாடுவது எளிதன்று. பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கள் இந்த அருமைப்பாடுடைய செயலை மிகவும் எளிமையாகச் செய்கின்றார். உவமை, உருவகம் கற்பனை எனப் பாடலை அழகு செய்யும் புற உத்திகளைக் களைந்து விட்டு, நேரடியாகப் பாடலையே நமக்குத் தந்து விடுகிறார். இத்தகைய புற உத்திகளையெல்லாம் களைந்து விட்டு எழுதும் முற்போக்குப் பாவலர்கள் குறைந்த பக்கம் உட்பொருளையாகிலும் பாடலில் மறைத்து வைத்துத் தருவர். ஆனால் பெருஞ்சித்திரனாரின் பாடலில் அந்த மூடுமந்திரம் கூட இல்லை. அனைத்தும் வெளிப்படையாக இருக்கின்றன. அதே போழ்து. அனைத்தும் பாடல்களாக இருக் கின்றன. எனவே இவரின் பாடல்களைத் 'திறந்த பாடல்கள்' எனக் கூறுவது சாலப் பொருந்தும்.

பெருஞ்சித்திரனார் பாடல்களின் உயிரோட்டமே பாடலுக்கென அவர் தேர்ந்தெடுக்கும் நேரிய சொல்லாட்சியில்தான் இருக்கிறது. கருத்தாழம் மிகுந்த சொற்கள் — அவற்றையும் நேரடியாகத் தரும் பாங்கு — பாடலில் இச்சொற்கள் இயல்பாக இணைகின்ற பொருத்தம் ஆகியன வியப்பிற்குரியனவாய் இருக்கின்றன. எந்த ஒரு சொல்லை யும் தேவையற்றது என்று எளிதில் ஒதுக்கி விடமுடியாது. சுருங்கக் கூறின் சொற்செட்டே பெருஞ்சித்திரனாருக்கு அழகுப்பாடலாக மலர்கிறது.

பெருஞ்சித்திரனார் பாடல்களின் அழகியலைக் காண்பது இன்றிய மையாதது. மாந்தரின் உள் உணர்வுகளின் அருகில் நின்று மயங்கப் பாடிக் கிறங்க வைக்கும் மீக்கூர்ந்த கற்பனை, இசை நயம், உள் ளினைவு எதுகை, மோனை ஆகியவற்றின் செறிவே உண்மையான பாடலின் அழகியல் என்பர் சிலர். பாடலின் நோக்கம் பாடலைத் துய்த்தலே என்னும் கொள்கையினை உடையவர்கள் இவர்கள். ஆயின் பாடலின் அழகியல் இவை மட்டுந்தாமா? கொடுமை, அச்சம், துயரம், மகிழ்ச்சி ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஓர் அழகு உண்டு. கொடுமையை உண்மையான கொடுமையாக-அச்சத்தை உண்மை அச்சமாகக் காட்டுவதே அழகியல். அவ்வாறாயின் பெருஞ்சித்திரனார் பாடலின் அழகியல் என்ன? **இருபதாம் நூற்றாண்டுத் தமிழரின் இழி நிலையை, அடிமைத் தனத்தை உயிரோட்டத்தோடும் பொருண்மையோடும் கூறியது தான்.** எமது சமகாலப் பாவலர் பலரும், இவ் விழி நிலையைப் பாடியுள்ளனர். எனினும் பெருஞ்சித்

திரனாரிடமே இவ்விழி நிலையின் முழுமலர்ச்சி தெரிகிறது. இந்த வகையில் இவ்விழி நிலைப்படத்தின் ஒருபாதிச் சட்டமாகப் பாரதிதாசனாரும், மறுபாதியாகப் பெருஞ்சித்திரனாரும் விளங்குகின்றனர்.

பொங்கிவரும் உணர்ச்சியை யாப்பு என்ற வடிவத்துக்குள் கொண்டு வரமுடியாத காரணத்தால் புதுப்பாடலுக்கு வந்து விட்டதாகக் கூறுகின்றனர். இன்றையப் புது புலவர்கள். இதற்குப் பாரதியை வேறு துணைக்கு வைத்துக் கொள்கின்றனர். ஆனால் வாழுகின்ற பாவலர்களில் பீறிட்டெழும் உணர்ச்சியை உணர்ச்சி மிகுந்த சொற்களைக் கொண்டு பாடல் புனைவதில் பெருஞ்சித்திரனாரைப் போல் இன்னொருவரைக் கண்டதில்லை. சுரதாவை உவமைப் பாவலர் என்பது எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருந்தும் பெருஞ்சித்திரனாரை உணர்ச்சிப் பாவலர் என்பது. இத்தகைய பீறிட்டெழும் உணர்ச்சி இவரிடம் மட்டும் எப்படி யாப்பில் வளைகிறது? காரணம் இவர் அரிச்சுவடிப் பாவலர் இல்லை என்பதுதான். இவருடைய பாடலின் உள்ளடக்கத்தில் இவருக்கே நல்ல தெளிவிருக்கிறது. எனவே உணர்ச்சியில் ஆற்றொழுக்கும் உருவத்தில் வரன் முறையும் இயல்பாகவே நன்கு அமைகின்றன.

புறநிலைப் பாங்கில் பெருஞ்சித்திரனாரின்—அவர் பாடல்களின் அடையாளம் இப்படி யெனின், அகநிலைப் பாங்கில் அவர் பாடல்கள் எப்படி? தமிழைச் சிறப்பித்துப் பேசும் முதல் 42 பாடல்களிலும் தமிழின் முன்னாள் பெருமை, இந்நாள் சிறுமை, தமிழர் ஆற்ற வேண்டிய கடமை ஆகியவற்றை எழுச்சியோடு கூறுகிறார். கொச்சைத் தமிழுக்கு முதன்மை தந்து எழுதி வரும் நாள், கிழமை இதழ்களுக்கும் அவற்றைச் சிறப்பித்துப் பேசும் தமிழர்களுக்கும் பாவலர் சூடு தருகிறார். கடுமொழியும் சுடுமொழியும் அவற்றில் இடம் பெற்றிருக்கின்றன. எனினும், அவற்றைப் பாவலரின் மனத்துயரத்தின் வெளிப்பாடகக் கொள்ள வேண்டுமேயன்றி, அச்சொற்களுக்கு நேர் பொருள் கொண்டு பாவலரை மதிப்பிடலாகாது.

'இந்தி எதிர்ப்பும் இன எழுச்சியும்' என்ற பகுதியில் இடம் பெற்றிருக்கும் 40 பாடல்களிலும் சிறப்பாகத் தமிழரின் இனவுணர்வின்மையை, வீரமின்மையை, போலித்தமிழர்களின் உள்ளங்களை, தமிழரசின் நெறிகளை, போக்கை, ஆடை உரித்துக் காட்டவில்லை — அவற்றின் தோலையே உரித்துக் காட்டுகின்றார். தமிழரின் எழுச்சிப் பத்தில் (பாடல் 61) உள்ள பாடல் வரிகள் இந்த நூற்றாண்டுத் தமிழரின் செவிப்பறையை மட்டுமன்றி, இனி வரும் தமிழர்களின் செவிப்பறைகளையும் கிழிக்கவே செய்யும். ஈழத் தமிழர்களை எண்ணிக் கண்ணீர் விடும் பாடலை (151) நினைக்கும்பொழுது, இந்த இழிவுத் தமிழ் வாழ்வு இன்னும் எத்தனைக் காலம் என்று எண்ணத்தோன்றுகிறது.

'கனிச்சாறு' இரண்டாந் தொகுதியில் இடம் பெற்றிருக்கும் பாடல்களில் முதற் பகுதி நாட்டுரிமையை விளக்குகிறது. அவற்றில் இடம் பெற்றிருக்கும் 37 பாடல்களிலும் தனித்தமிழ் நாட்டின் தேவையை எடுத்துக் காட்டுகளுடனும், அளவையியல் முறையிலும் விளக்குகிறார். பாவலர் காட்டும் தமிழ் நாட்டின் இருண்ட நிலை, புரட்சியின் தேவை, இன இழிவை போக்கிக் கொள்ள வேண்டியதன் இன்றியமையாமை ஆகியன, தமிழரின் சிந்தையில் நிலைபெற்று நிற்க வேண்டியவை. புரட்சிப் பாவலரின் **'குயில்'** இதழ் மீண்டும் வெளிவந்த பொழுது, பெருஞ்சித்திரனார் பாடிய **'குயிலே'** என்ற விளிப்பாட்டில் (பாடல் 31) 'நறுந்தமிழைப் பாடும் குயிலாகவும் 'இளந்தமிழை இசைக்கும் குயிலாகவும் 'நற்றமிழ்ப்-பா நாட்டும் குயிலாகவும், குயிலைக் கூறியுள்ளார். 20ஆம் நூற்றாண்டுக் குயில் தமிழைத் தான் கூவவேண்டும். அது புரட்சிப் பாவலரின் சிந்தையினின்றும் பிறந்த குயிலாயிற்றே.

'பொதுமை உணர்வு' இளைய தலைமுறை' என்ற பகுதியில் அடங்கியுள்ள 84 பாடல்களும் பாவலரின் படிநிலை வளர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டுவன. எப்படி? முதல் மூன்று பகுதிகளிலும் தமிழை, தமிழரை தமிழ் நாட்டைப் பாடிய பாவலர் இப்பகுதிகளில் மாந்தத்தை-மன்பதையைச் சிறப்பித்துப் பாடுகிறார். சில இடங்களில் மெய்ம்மம் இழையோடுகிறது. குறிப்பாக 'யாருக்காக நீ?' (பாடல் 95) என்ற பாடல் மெய்ப்பொருள் செறிவினை உடையது. 'படிப் படியாக' (பாடல் 91) என்ற பாடலும் **'குழந்தை'** (பாடல் 99) என்ற பாடலும், பாடாண்மை மிகுந்த இலக்கிய அரும்புகள்.

இரண்டு தொகுதிகளையும் மொத்தமாகப் பார்க்கும் பொழுது இவற்றிற்குக் **'கனிச்சாறு'** என்று தந்திருப்பதைவிடத் **தீச்சாறு** என்ற பெயர்தந்திருந்தால், பொருள் பொருத்தத்திலே அமைந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. பட்ட மரத்தில் நெருப்பு மலர் இதழ் விரிப்பதைப் போல் பாடல்களைப் படிப்போரின் சிந்தையில் ஒரு புறம் அனல் காயத்தான் செய்கிறது.

பெரு மரங்கள் நிழலில் வளர்வனவல்ல. ஆனாலும் பாரதிதாசன் என்ற தோப்பில் வளர்ந்த இந்த மரம் நிழலையையும் மீறித் தனி மரமாய் - பெருமரமாய் வளர்ந்திருக்கின்றது. பழந்தமிழகத்தின் பெருமைகளை எண்ணி முற்றிலும் மகிழ முடியாமலும், இந்நாள் தமிழகத்தின் சிறுமைகளை எண்ணி முற்றிலும் அழ முடியாமலும் தவிக்கும் பெருஞ்சித்திரனாரின் பாடல்களில் பல நூறு கற்பனைகளையும் உணர்ச்சிகளையும் காட்டும் பாடல் துணுக்குகளைப் படிப்பவர் உறுதியாகக் காண்பர். குறைந்த பக்கம் ஒரு மெய்விளக்க முதுவர் (எம். பில்) பட்டத்தையேனும் ஆய்வாளருக்குப் பெற்றுத் தரும் வெற்றியினை யுடையது பெருஞ்சித்திரனார் பாடல் என்று நம்பிக்கையோடும் முன் மொழிகின்றேன்.

— நன்றி. **தமிழ்ப்பணி** - மாலை 12, மலர் 8.

தாள்

தமிழூர் ப. அருளி

தாள் : (கீழிருத்தல் கருத்து மூலம்)

தாள் – பாதம், அடி. நல்தாள் தொழாஅர் எனின் (குறள்-2). தனக்குவமை யில்லாதான் தாள் (குறள்-7). அறவாழி அந்தணன் தாள் (குறள்-8). எண்குணத்தான் தாள் (குறள்-9). தாணிழல் மருங்கில் (பொருநரா. 149) ஒன்னார்க் கொன்றதன் தாள் சேருநர்க் கினிதீத்தும் ... (புறம். 361. 9-10). இவ்வரிக்கு பகைவரைக் கொன்ற தன் தாளாண்மையைப் பாராட்டிப் பாடும் புலவர்க்கு உவந்தளித்தும் என்று பழைய உரையில் தவறுகப் பொருள் சொல்லப் பெற்றுள்ளது. ஒ. நோ : தாள் சேர்ந்தார்க் கல்லால் (குறள். 7,8) (தாள்-அடி) — தாள் சேர்தலும் அடிசேர்தலும் ஒன்றேயென்பதை இறைவனடி சேராதார் (குறள்-10) வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார் (குறள். 4) மாணடி சேர்ந்தார் (குறள். 3) ஆகியன மெய்ப்பிக்க வல்லன. தாள்-அடி, பாதம். தாள்-தாள (சமற்). ஒ. நோ : தளஃரிதய (SKT. Tala-hridya - centre of the sole of the foot.)

தாள் - அடி, அடிப்பகுதி. நெடுந்தாள் ஆசினி (மலைபடு 139). நச். உரை : நெடிய அடியை உடைய ஆசினிப்பலா. குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யா அத்து (அகம். 193 : 7) (உரை : குறிய மலையுச்சியில் எழுந்த நீண்ட அடிப்பகுதியை உடைய யாஅ மரத்தினது ...). படப்பை நின்ற முடத்தாள் புன்னை (அகம். 180 : 13) (உரை: தோட்டத்தில் நிற்கின்ற முடம்பட்ட காலை (அடிப்பகுதியை) யுடைய புன்னையினது ....). தடந்தாள் தாழை (நற் : 203 : 2). பணைத்தாள் ஓமை (நற் 318: 2). கருந்தாள் வேங்கை (நற். 351 :5) கருந்தாள் க்நதத்து (அகம் 307 : 12) (உரை : வலிய தாளினையுடைய தூணில்.)

தாள் எனுஞ்சொல், மரத்தின் கனத்த அடிப்பகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்று, அந்நிலைத்திணை வகைகளுள் பயிர்களின் அடிப்பகுதியையும் [தூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர் (பெரும் பாண். 231) (Spanish. தாள் - Stalk (st. m.)] பின் படியே அவற்றின் இலைகளையும் பற்றிச்சென்று, பொதுவாக இலைக்கும் நிலைத்து இன்றைய தாள் (paper) வரை வளர்ந்துள்ளது.

எழுத்தாணி கொண்டு எழுதி வரப் பெற்ற பனையோலையும் இலை வகையுளொன்றுதலால் அதுவும் தாள் எனும் பெயரைத் தாங்கிக் கொண்டது. (ஒப்பு நோக்க : பத்ர (சமற்) = சிறகு, இலை பத்ரிகா = தாள். ஒ. நோ : செய்தித்தாள் (பத்திரிகை).

[கூலவகையுள் சிலவற்றின் இலைக்கு ஆகி வரல் : ஒ. நோ : பைந்தாள் செந்தினை (நற். 376 : 2.) கவைகதிர் வரகின் யாணர்

பைந்தாள் (359 : 13. அகம்). தாள் ஆர் மலர்ப்பொய்கை. (12 : திருவள். மாலை). தாள் = இலை.

தாள் = அடி, அடிப்பகுதி, கால். கொடுந்தாள் ஏறு (மலைபடு. 508). நச். உரை: வளைந்த காலையுடைய ஏறு. கருந்தாள் எருமை (நற். 260 : 1) பொருத யானை புட்டாள் ஏய்ப்ப (நற். 279 : 6.) புண் + தாள் = புட்டாள். (புண்பட்ட காலடி). தாள் = குளம்பு பரியுடை வயங்குதாள் பந்தின் தா அய் (நற் : 249 : 7). படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின் (புறம் : 326 : 9) உரை : குறுகிய காலையுடைய. தாஅத் தாளிணை மெல்ல ஒதுங்க (அகம் 134:8.) உரை : தாவுகின்ற இணை ஒத்த கால்களினால் மெல்லச் செல்லுமாறு. கவைத் தாள் அலவன் கலவை யொடு பெறுகுவிர் (சிறுபாண் :195;

தாள் = கால், கணுக்கால். பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்கு ஒப்ப (பொருநரா : 4). நச். உரை: திருந்தின கணைக்காலுக் குப் பொருந்த. தாள் = கணைக்கால்)

(Tali pes (Eng) = Club footedness. L. Talus = ankle pes = foot.

Talus (Eng) - (Anat) Ankle (- bone). L. ankle, heal.

L. Talares — கணுக்கால். L. Talari - Vestis = குதிகால் மட்டும் தொங்குகின்ற நெடும் உடை. (French) Du Talon — குதி காலின். L. Talon — (ME, fr. MF. heel L. Talus — ankle) = the hinder part of a hoof.

Taligrade (Eng) — L. Talus — ankle, ankle bone. bearing the weight on the outerside of the foot in walking.

L. Talaris (adj). of the ankles, reaching the ankles. winged shoes clasping the ankles, sandals with wings, A long robe dress following to ankles.

[இதையும் ஒப்பு நோக்குக : genu flect (Eng) — to bend the Knee esp. in worship. கணு — (Lat) genu — the knee.

L. Talaria — மிதியடி. தாள் எனும் அடியைக் குறிக்கும் சொல்லினின்று ஆக்கம் பெற்றுள்ளது.

இந்தோ — ஆரியக் கிளை மொழிகளில் "தாள்" என்னும் சொல் 'கால்' என்னும் பொருளில் ஆளப் பெறுகின்றமையைக் காண்க. தமிழ் உலக முதன் மொழி என்பதற்கு இதுவும் ஒருசோற்றுப்பதமே!

(சாஃபூரின் லாஃந்தா) தாளெ	(மல்தானி) தாளெ
(தா அன்னி) ..... தாள்ள	(தின்னேளி) ... தாளெ
(ஒரியா) ...... தாளெ	(சக்மா) . . . தாளே
(சிரிப்பூரிய -'கிழக்கு') ... தாளெ	(அசாமி) . . . தோள்

(சிரிப்பூரியா - 'கோசார்') ... தாளெ (இந்துத்தானி) •. தாளே
(தாக்கினி) .., தாளே (குமோனி) . . தாளி
('அசாராவின்', குச்சுரி) .•. தளா (கார் வாலி) ... தாள்
('கிழக்கு' பஃகாரி) .. தள, தளி (பகாடி) ... தோள்
('நடு' பஃகாரி) ... தாளி (சோடாட்சி) .., தோல்
('ஐரோப்ரிய' சிப்சி) ... தெளி

[அதே இந்தோ - ஆரியக் கிளை மொழிகளில் சிலவற்றில் 'கால்' எனுஞ் சொல்லையே திரிப்பாக்கியும் ஆக்காதும் ஆளப் பெறுகின்றமையையுங் காண்க.]

(பன்னபாரி) .., காலி (மராத்திதேசி) ... காலி
(நாகபூரி) ... காலி (சத்தி சுகாரி) ... காலெ
(காந்தேசி) ... கால் (தோக்ரி) ... கால்.

வினைகளை மேற்கொண்டு செய்வதற்குச் செல்லுதல் வேண்டியமையால், அஃதாவது ஓரிடத்தே அமைந்திராது நடந்து ஆற்ற வேண்டியிருந்த காரணத்தால், தாள் என்னும் அடியைக் குறித்த சொல்லே முயற்சியையுங் குறிக்கலாயிற்று. நடத்துதல் எனும் சொல் செய்வித்தல் எனும் பொருளையுந் தாங்கிக் காழ்ந்துள்ளமையையுங் காண்க. (நடத்தல்—இயங்கல்). மொழிஞாயிறு பாவாணர் அவர்கட்கு விழா நடத்தினர் (உ. வ) (விழா நடத்தல் — விழா செய்வித்தல்).

ஒ. நோ : செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும் (குறள் 1039).

செல்லுதல் — சென்று கவனித்தல். சென்று கவனித்துச் செய்ய வேண்டியதைச் செய்தல் (பாவா. திரு. மரபுரை. பக் 381).

தாள் —முயற்சி. மருவின்றி விளங்கிய உரனுடைய நோன்தாள் (சிறுபாண். 115) (நோன்தாள் — வலிய முயற்சி.) வாள்வலம் புணர்ந்த நின் தாள்வலம் வாழ்த்த (மது. காஞ். 727). ஆளில் பெண்டிர் தாளிற் செய்த (நற். 353: 1). உரை: கைம் பெண்கள் 'முயன்று' நூற்ற நோன் தாள் அடிபுதை அரணம் (பெரும் பாண். 69). [அடிபுதை அரணம் — இதை வடமொழியாளர் 'பாதரட்சை' என மொழிபெயர்த்துக் கொண்டனர் அஃதாவது பாதத்தைக் காப்பது (ரட்சிப்பது!)]

தாள் — முயற்சி (குறள் 151, 212, 617) தாள் — முயறல் (பரி. உரை) நோன்ருள் நசைவளன் (புறம் : 148 : 2). தாள் படு செல்வம் (புறம் : 161 : 15).

தாள் — (முயற்சி) (ஊக்கம்) உழைப்பு தாள் தந்தது உண்ணல் (குறள் : 1065) உழைப்பினல் வந்தவுணவை உண்ணுதல். தாள் ஆற்றித் தந்த பொருள். (குறள் : 212) தாள்—முயற்சி. தாள்வலம் படுப்ப (அகம் 61 : 3) உரை : ஊக்கத்தினை வெற்றியுறுவிக்க.

தாள் - தாளம் — தாளால் தட்டுதல், (நடனம் ஆடுபவர் தம் பாதத்தால் ஆடல் இலக்கணத்திற்கேற்ப முறையே பதிக்கை ; அவ் விலக்கணப்படி கால் பதித்தற்குத் ஆணைகாட்டப் பயன் படுத்துங் கருவி ; ஓர் இசைக்கருவி.)

தாள் (கீழ்) = தாள் — தாழ்.

தாழ் = தாழ் + சி — தாழ்ச்சி (Delay). தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (குறள் 671)

(தாழ் + வு) — தாழ்வு. தாழ்மை, தாழ்கை, தாழ்தல் தாழல். கீழிருத்தல் கருத்து மனப் பண்பு இழிவுகளைக் குறிக்கத் தோன்றிய மற்ற சொல்லாக்கங்களைக் கீழ் வருவனவற்றை ஒப்பு நோக்கிக் காண்க !

புல் — (புல் + மை) — புன்மை
கீழ் — கீழ்மை
இழி — இழிவு
தாள் — தாழ் — தாழ்ச்சி (தாழ்வு)

இளிவுங் கீழ்மையும் எண்மையும் தாழ்மை. (பிங். 3632)

தாள் — தாளி = ஒருவகை அருகம்புல். Ipomala sapiania. (Bot)

தாளித் தண்பவர் நாள் ஆ மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியும் நாளும் பலவா குவவே! — குறுந். 104.

தாளித் தண்பவர் — தாளியறுகின் குளிர்ந்த கொடி. தாளி — ஈண்டு புல்லைக் குறித்தது.

பனையும் அக்காலத்தே புல் வகையுள் ஒன்றாகவே வைத் தெண்ணப் பட்டது. ஒ. நோ : புறக்காழனவே புல்லென மொழிப (தொல் 1585)

தாள் — தாளி — பனை (சூடா) (Corpha Umbroculifea.)
கூந்தற் பனை வகை (பிங்.)

(தெலு) தாடி — பனை. (கன்) தாழ் (துளு) தாளி, தாரி.
தாள் — தாளம் = பனை. (சூபி. தமி. அக.)

தாள் — தால் — தாலம் = பனை.

தாலப் புல்லின் வால் வெண் தோட்டு (16. 35 சிலம்.)

(அடி. நல். உரை : பனையாகிய புல்லினது மிக வெள்ளிய ஓலையினால்.

தாள் — தாளி — பனை.

Talipot - (n) (Eng) -- Very tall south Indian fan palm with huge leaves used as sun shades etc.
(Malayalam) : Talipat (Hindi) : Talipat

தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்

— பெருஞ்சித்திரனார்.

(ஆசிரியர் குறிப்பு : இக் கட்டுரை உலகத் தமிழ் மாநாட்டு மலர்க்கென எழுதப் பெற்றது. ஆனால் இடமின்மை காரணமாக, இதில் சில பகுதிகள் தவிர்க்கப் பெற்று, எஞ்சிய பகுதிகளையே மலரில் வெளியிட்டிருந்தனர். எப்பகுதியும் நீக்கப் பெறாத முழுக்கட்டுரை, தென்மொழி அன்பர்களுக்காக இங்கு வெளியிடப் பெறுகிறது. இனி, இத்தலைப்பில் இக்கட்டுரை ஆசிரியர் எழுதிக் கொண்டுள்ள நூலில் இன்னும் விரிவான செய்திகள் வெளிவரும்.)

I. முன்னுரை

1. மொழியும் அதன் படிநிலை வளர்ச்சியும்

மொழி என்பது மாந்தனின் உள்ளுயிரில் தோன்றி, உணர்வு வளர்ச்சிக்கேற்ப முகிழ்த்து ஒலிவடிவாய் வெளிவரும் ஓர் இயற்கை வெளிப்பாடு. அஃது அவன் அறிவு வளர வளர, ஒலித்தொகுதிகளாய் விரிந்து, கருத்துகளைப் புலப்படுத்தும் சொற்களாய் இணைந்து, சொற்றொடர்களாய் விளங்கி, கால அடைவிலும், அறிவுப் படிநிலை வளர்ச்சி-

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

(Skt) tala - pattra (Ox. Dic. p. 1179)

(சமற்) தாள - பத்ர = பனையோலை.

Tali pot = (Bengali) Tali pot -- palm leaf. (Web. Dic)

Tali-era = Bengali taliera (frequently Skt. tali frequently 'tala' palmyra palm, of Dravidian origin, akin to Kanarese. tal palm -- Book-palm (Web. Dic. p. 2333)

திரவிட மூலத்திற்கு அணுக்க முடையதென வெபுசுதரின் கூற்று நோக்கு நயனுடையது. தமிழ் வழக்கையும் மூலத்தையும் அவர் அறியாராதலால் முற்று முடிவைச் சொல்ல இயலாது விட்டனர்.

கை, விரல்விரிப்பொடு காணும் போதிருக்கும் தோற்றத்தை, பனைமரத்தின் ஓலை ஒத்திருப்பது நோக்கி, அதன் அடிப்படையில், உள்ளங்கையைக் குறித்த palma என்ற இலத்தினச் சொல்லினின்று பனைமரத்திற்கு 'Palmyra' என உருவாக்கிக் கொண்டனர்.

சான்று : L. palma, PALM, --It is leaf being likened to a spread hand. (P. 794 C. O. D)

palmyra. (N) a tall south Indian palm.

(port.) -- palmerira. (Web. Dic). O

யிலும் மலர்ச்சியுற்று, மக்களுக்குள் ஓர் இணைட்புணர்வுப் பாலமாய் நின்று, வாழ்வெலாம் அவர்களுக்கு வழித்துணையாய் இருந்து, அவர்களைக் கடைத்தேற்றுவது. அஃது, ஒரு சொற்கூட்டமென்றோ, வெறும் கருத்தைப் பறிமாறிக் கொள்ளும் கருவி மட்டுமென்றோ கொள்ளாது, மக்களினத்தின் உள்ளுணர்வுகளோடு, பின்னிப் பிணைந்து, பண்பாட்டால் அவ்வினத்தை வளர்த்தெடுக்கும் ஒரு வாழ்வியல் கூறு என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். செயற்கையாக, நாம் ஒரு மொழியை உருவாக்கவோ, உருவாக்கிப் பேசவோ, பேசி அறிவு பெற்று அனைவரும் உணர்ந்து வாழ்க்கை நடத்தவோ இயலாது. அப்படி நடந்ததாக வரலாறும் இல்லை. முன்பொரு முறை மேனாட்டில் **'எசுப்பெரண்ட்டோ' (Esperanto)** என்பதாக ஒரு செயற்கை மொழியையும், அதற்கான எழுத்துவகைகளையும் உலக ஒற்றுமை கருதிப், பல்வேறு மொழிகளுக்கும் பொதுவான சில ஒலிநிலைகளைக் கொண்டு உருவாக்கிப் பார்த்தனர். (1887). ஆனால் அம்முயற்சி படுதோல்வி அடைந்து.

தொடக்கத்தில் இயற்கையாக விளைந்த நெற்பயிரை, மாந்தன் எப்படி மீண்டும் விளைவித்துண்ணக் கற்றுக் கொண்டானோ, அப்படியே தொடக்கத்தில் இயற்கையாக வெளிப்பட்ட மூலவொலிகளினின்றே இவன் கருத்துகளைப் படைத்துக் கொண்டு, அவற்றினின்று பலவகை அறிவையும் உணர்வையும் ஒரு சேர வளர்த்து, இறுதியில் முழுமொழி மாந்தனாக மாறினான். அவன் மொழி வளர்ச்சியொடு இணைந்து வளர்ந்தன, அவன் இலக்கிய வளர்ச்சியும் கலைகளும் பண்பாடும். அவற்றால் அவன் அறிவு மேலும் மேலும் வளர்ச்சியுற்றது. அறிவு வளர்ச்சி அவனிடத்தில் புறக்கூறாகிய நாகரிகத்தையும் அகக்கூறாகிய பண்பு வளர்ச்சியையும் தோற்றுவித்தது. இக்கால் அவன் முழுமை மாந்தனாக வளர்ந்துள்ளான். இனி அவன் மீமிசை மாந்தனாகவும் வளர்ச்சியுறல் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மொழியின்படிநிலை வளர்ச்சியே அடிப்படைக் கரணியம் என்று அறிதல் வேண்டும்.

2. தமிழ் மொழியின் தோற்றமும் அதன் சிறப்பியல்புகளும்:-

தமிழ்மொழியின் தோற்றம் மிகத் தொன்மையானது. அது, தெற்கே, இந்துமாகடலில் மூழ்கிப்போன குமரிக் கண்டத்தில் தோன்றியதென்பது நடுநிலை ஆராய்ச்சியாளர்கள் கூற்று. நிலத்தின் உள்ளும் புறமும் ஏற்படும் வேதியல் மாற்றங்களால் குமரிக்கண்டம் முழுகிப்போனதும், வடக்கே பனிமலை (இமயமலை) தோன்றியதும் நிலவியல் வரலாறு. மிகப் பழங்காலத்தில் நடந்தது இது. இந்நிலை ஒரே காலத்தில் ஏற்பட்டது அன்று. படிப்படியாய் மூன்று கடல் கோள்களால் நேர்ந்தது. முதற்கடற் கோளால் குமரிமலையும் பஃறுளியாறும், தலைக்கழகத் தென் மதுரையும் அழிந்தன : இரண்டாம்

கடற்கோளினுல் இடைக்கழகம் இருந்த கபாடபுரம் அழிந்தது; மூன்ருங் கடற்கோள் குமரியாற்றையும் காவிரிப்பூம் பட்டணத்தையும் அழித்தது. குமரி மலைத் தொடரும், பஃறுளியாறும் அழிக்கப்பட்ட பின் பாண்டியர்கள் வடக்கே வந்து, இமயமலை வரையும் பரவி அரசாண்டனர். இச்செய்தி '**பஃறுளியாற்றுடன்**' என்று தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுளடிகளாலும், '**மலிதிரையூர்ந்து**' என்று தொடங்கும் கலித்தொகைச் (104) செய்யுளாலும், '**வடா அது**' என்று தொடங்கும் புறநானூற்றுச் (6) செய்யுளடியாலும் தெரிய வருகிறது. அத்துடன் இமயமலைக்கும் தமிழர்க்கும் உள்ள தொடர்பு நம் இலக்கியங்களில் பரவலாகக் குறிக்கப் பெறுகிறது.

தமிழர்கள் குமரிக்கண்டத்தில் தோன்றியதால், தமிழும் அக் காலத்திலேயே, ஏறத்தாழ 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி யிருத்தல் வேண்டும் என்பர் மொழியறிஞர் பாவாணர். தமிழ்மொழி தோன்றி நீண்ட நெடுங்காலத்திற்குப்பின் மிகச் சிறந்தோங்கியிருந் திருத்தல்வேண்டும். அதற்குச் சான்ருகக் கழகப்பாடல்கள் பல மிகவும் இனிமை வாய்ந்தனவாகவும் அரிய வாழ்வியல் கருத்துக்களைத் தெரி விப்பனவாகவும் உள்ளன. நம் கைக்குக் கிடைத்த இவையே இத்துணைச் சிறப்புகள் வாய்ந்திருந்தால், ஏற்கனவே பலவகையிலும் அழிந்துபோய், நம் கைக்குக் கிடைக்காத இலக்கியங்கள் எத்துணைச் சிறப்பு வாய்ந்தனவாக இருந்திருத்தல் வேண்டும். நம் தமிழ்மொழி, செந்தமிழ், பைந்தமிழ், அந்தமிழ், அருந்தமிழ், இன்றமிழ், தென் றமிழ், தீந்தமிழ், தேன்றமிழ், நறுந்தமிழ், நற்றமிழ், தண்டமிழ், வண்டமிழ், முத்தமிழ், கன்னித்தமிழ் என்றெல்லாம் போற்றப் பெறுவதுடன், அது தொன்மையும் முன்மையும், தாய்மையும் தூய் மையும், இளமையும் வளமையும், உண்மையும் நுண்மையும், தனி மையும் இனிமையும் நிறைந்து விளங்குவதாகப் பெருமை பேசப் பெறுகிறது. இதுபோல் வேற்று மொழியினர் எவரும் தம் தாய் மொழியைச் சிறபித்துப் பேசுவதில்லை. அவ்வாறு பேசுவதற்குரிய அளவு அவர்கள் மொழியும் அவ்வளவு சிறப்புப் பெற்று விளங்கு வதில்லை. தமிழ்மொழி மிகவும் சொல்வளம் மிகுந்த மொழி. இதில் பல அறிவியல் கூறுகளும் உள்ளன. ஆனுல் தமிழர்கள் இம்மொழியை இக்கால் சரிவரப் பேணுவதில்லை; புரப்பதில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது.

3. தமிழ் மொழியின் வரலாற்று வீழ்ச்சியும் அதன் சீரழிவு களும் :

கழகக்காலம் வரையில் மிகச் செழிப்பாக வளர்ந்திருந்த, நம் தாய்மொழியாகிய தூய, இனிய செந்தமிழ், அதற்குப் பின் வரவர, ஆரியரின் வேதமதத்தாலும், சமண, பௌத்த மதங்களாலும் தாக்குண்டு, படிப்படியாய்ச் சீர்கெட்டது. அதற்குரிய வரலாற்றுச்

சான்றுகள் ஏராளமாகவுள்ளன. தொல்காப்பியத்துள் கூறப்பெறும் வடமொழிச் சேர்ப்பு இலக்கணமும், அம்மொழி வந்து தமிழில் கலந்து வழங்குதற்கு வழிவகுத்ததாகவே அமையும். ஆரியரின் வேதமொழியும் வடதிரவிட மொழிகளான பிராகிருதமும் பாலியும் கலந்து செய்யப் பெற்ற சமற்கிருதம் சமய நோக்கத்துடன் தமிழ் மொழியொடு பலவாறு தீய நோக்கத்துடன் கலக்கப் பெற்று அதைச் சீர்குலைத்தன. அதனால் தமிழ்மொழி பல்வேறு வகையாகத் திரிபுற்றுச் சிதைந்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய இருபத்தரண்டு மொழிகளாகப் பிரிந்தது மொழிகள் வேறுபட்டுப் பிரியவே தமிழ் மக்கள் தொகுதியும் நிலமும் மிகமிகச் சிறுத்தன. வேத ஆரியர்களும், தமிழ் மூல நூல்களைத் தம்மொழியாகிய சமசுக் கிருதத்தில் பெயர்த்தெழுதித் தம்மொழக்கு ஏற்றம் தேடிக் கொண்டு, தமிழ்மூலநூல்களை அழித்தனர். அதுபோலவே, புறச்சமயங்களான சமண, பௌத்த மதங்களின் உட்கூறுகளையும், ஏற்கனவே தமிழர்களின் மதங்களாகவிருந்த அகச் சமயங்களான சிவனிய (சைவ), மாலிய (வைஷ்ணவ) மதங்களின் தெய்வ வணக்கங்களையும், தம் வேத மதத்தில் இணைத்துக் கொண்டு அம் மதங்களின் தனித்தன்மைகளை அழித்து, இந்துமதம் என்ற பெயரில் வேதமதத்தை வளர்த்தனர். மதப் போராட்டங்களாலும், வேத மதத்தின் அளவிறந்த வளர்ச்சியாலும் தமிழ்மொழி மேன்மேலும் சீரழிந்து கலப்பு மொழியாய்ப் பெருமை குன்றி வாழ வேண்டுவ தாயிற்று. ஊர்ப்பெயர்களும், இறைப் பெயர்களும், வடமொழியாகிய சமசுக்கிருதத்தில் மொழி பெயர்க்கப் பெற்று வழக்கூன்றின. கழகக் காலத்தில் தூய தமிழ்ப் பெயர்களாகவே வைத்துக் கொண்டிருந்த மக்களும் அரசர்களும் வடமொழிப் பெயர்களைத் தாங்கினர். ஏராளமான வடசொற்கள் மக்கள் வாழ்வியலின் அன்றாடப் புழக்கத்தில் ஏறின. மிக எளிமையாகவும், இனிமையாகவும் இருந்த சமயச் சொற்களெல்லாம் வடமொழி யாயின. நூல்களுள் வடமொழியே வரவரப் பல்கிப் பெருகியது. உரைநடை. நூல்கள். செய்யுள் நூல்கள் இசை, நாடகம் எனும் அனைத்திலும் வடமொழி ஆட்சி செலுத்தியது

சமயத் தாக்கங்கள் இவ்வாறு ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கையில், தமிழக அரசியலில் வந்து வாய்த்த ஆட்சித்தாக்கங்களும் பல வகையில் தமிழைச் சீர் குலைத்தன. களப்பிரர், பல்லவர் ஆட்சியரசுகள் வடமொழியாளர்க்கும் அவரின் வேதமதத்துக்குமே ஊக்கமளித்துப் போற்றிப் புரந்தன. மக்களுக்குள் சாதி வேறுபாடுகள் கற்பிக்கப் பெற்று, இனவொற்றுமையும் சீர்குலைக்கப் பெற்றது. வடமொழியாளர்களாகிய பிராமணர்களின் கை மிக்க மேலோங்கியிருந்தது. அரசியல், குமுகாயம், சமயம் ஆகிய முத்துறைகளிலும் அவர்களின் ஆளுமை கொடிகட்டிப் பறந்தது. வேற்று அரசர்களின் ஆட்சிக் காலங்களில், தமிழ்நாட்டில் அரபியர்கள் யூதர்கள், பார்சி

யர்கள், சீனர்கள், போர்ச்சுக் கீசியர்கள் முதலிய பல இனத்தவரும் வந்து வாழவும் வாணிகம் நடத்தவும் தொடங்கினர். அவர்களின் மொழிகளாலும் தமிழ் மேலும் கலப்புற்றது. தொல்காப்பியமும் திருக்குறளும் பிற கழக இலக்கியங்களும் தவிர, பின்னர் எழுந்த நூல்கள் அனைத்திலும் வடமொழி பேரளவிலும், பிறமொழிகள் சிற்றளவிலும் ஆளுமை செய்தன. அதன் பின்னர் வந்த ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலமும் தமிழொடு கலந்து, தமிழரின் பேச்சு வழக்கையும் நூல் வழக்கையும் மேலும் சிதைத்தது. இக்கால் கணக்கற்ற உருதுச் சொற்களும், அரபுச் சொற்களும், இந்துத்தானிச் சொற்களும் தமிழ்மொழியில் கலந்து வழங்கி வருகின்றன. இவையன்றி, அகப்பகைவராலும் தமிழ்மொழி சீரழிவுற்றது. பார்ப்பனத் தமிழ்ப் பேரறிஞர்களும் மறைமுகமாக வடமொழிக்கே பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் தந்து போற்றினர். வையாபுரி முதலிய தமிழ்ப் பேராசிரியர்களும் தமிழ்மொழியின் தனித்தன்மைகளைக் கெடுத்தனர். (இவ்வரலாற்றின் மிக விளக்கமான விரிவையெல்லாம் இக்கட்டுரையாசிரியர் இக்கட்டுரைத் தலைப்பின்கீழ் எழுதிய தனிநூலில் கண்டு கொள்ளலாம்).

இச்சூழ்நிலையில் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழ் மொழியைப் பற்றிக் கவலையும், அக்கறையும், ஆர்வமும், ஊக்கமும், விடாமுயற்சியும் கொண்ட தமிழ்ப்பேரறிஞர்களும், பொதுமக்களில் பலரும் விழிப்புணர்வு பெற்றுத் தமிழ்மொழியை அயல்மொழிச் சீர்குலைவினின்றும், கலப்பினின்றும் தடுத்து, அதன் தூயதன்மையையும், பழஞ்சிறப்பையும் கட்டிக் காத்தற்கு ஓர் இயக்கமாக நின்று முனைப்புடன் பாடாற்றினர். அதுபற்றிய செய்திகளைச் சுருக்கமாக இனிவரும் பகுதிகளில் காண்போம்.

உ. தனித்தமிழியக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்.

1. தொடக்கக் கால முயற்சிகள்.

தனித்தமிழ் என்பது வேறு ஒரு தனிமொழியன்று. கலப்புத் தமிழினின்று அதை வேறு பிரிக்கவே, அதைத் **'தூயதமிழ்'** என்றும் **'தனித்தமிழ்'** என்றும் அடைகொடுத்து வழங்க வேண்டுவதாயிற்று. தமிழ் மேன்மேலும் கலப்புற்றுத் தன் இயற்கையாந் தன்மை கெடுவதைக் கண்டு பொறாத அறிஞர்களும், தமிழ்ப் பற்றுளார்களும், அதனைப் பலவகையிலும் அச்சீரழிவினின்றும் தடுத்து நிறுத்த எண்ணங்கொண்டு, நூல்கள், இதழ்கள் வழியாக எழுதியும் பேசியும் வந்தனர். இம்முயற்சி பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கக் காலத்திலேயே தொடங்கியது.

தூய தமிழுணர்வு தொடக்கத்தில் திரவிடர் உணர்வெழுச்சியாகத் தோன்றியது. ஆரியம் மதத்தாலும் மொழியாலும் இனத்தாலும் குமுகாயத்தில் மேலாளுமை செலுத்தியதும், 17-ஆம் நூற்றூண்டிறுதியில் சாமிநாத தேசிகர் என்ற **'இலக்கணக் கொத்து'** ஆசிரியர், 'அன்றியும் தமிழ்நூற்களவிலை ; அவற்றுள் ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ ?, என்றெழுப்பிய வினவும் இதற்குக் கரணியமாகும். கால்டுவெல் **(Rev. Robert Caldwell-*1814 -1891*)** அவர்களின் **'திரவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல்'** மொழி நூலறிஞர்களிடம் தனி மதிப்புப் பெற்றது. அது தமிழ் மொழியின் பெருஞ்சிறப்பை உணர்த்தியதுடன், தமிழ் ஆரியத்தினின்று தோன்றியதென்னும் தவறுன கருத்தை உடைத்தெறிந்தது. தமிழின் தனித்தன்மையை உயர்த்தி, அஃது ஓர் உயர்தனிச் செம்மொழி என்னும் உண்மையை நிலைநாட்டியது. இன்னும் வெளிநாட்டுக் கிறித்துவக் குருமார்களாகிய இராபர்ட்டு நொபளி (Robert De. Nobili), எல்லிசு, வீரமாமுனிவர் (Constantus Joseph Beschi 1680-1746), போப், **(G. U Pope 1820 1903)** ஆகியோரின் தமிழ் மொழி மதிப்பீடுகளும் 'தமிழ் தனித்தியங்க வல்ல நல்ல செம்மொழி' என்னும் கருத்தை வலியுறுத்தியது 16-ஆம் நூற்றூண்டிலேயே பரஞ்சோதி முனிவர் 'பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ், ஏனை மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல், எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ ?' என்ருெரு வினவை யெழுப்பி, வடமொழி தென்மொழி இவற்றின் இறக்கத்தையும் ஏற்றத்தையும் வெளிப்படுத்தினர். *18*-ஆம் நூற்றூண்டின் இறுதியில் வாழ்ந்த பேரா. மனோன்மணியம் சுந்தரனர் ''ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாத தமிழின் சீரிளமைத் திறத்தை வியந்து, சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் தமிழே'' என்று கூறி, ஆரியத்தைவிடத் தமிழ் உயர்ந்தது என்னும் கருத்தைத் தெரிவித்தார். இசைத்துறையில் தமிழின் தனித்தன்மையைத் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் *(1859—1919)* நிலைநாட்டினர். அயோத்திதாசப் பண்டிதர் *(1845—1914)* என்பார் தமிழில் **'தருக்கநூல்'** ஒன்றெழுதியும் **'தமிழன்'** என்ருெரு தாளிகை நடத்தியும் தமிழுணர்வைப் பரப்பினர். ஆங்காங்கே திரவிடர் இயக்கங்கள் தோன்றின. திருக்குறளுக்கு நல்ல ஆக்கம் ஏற்பட்டது. திருக்குறள் தூயதமிழில் எழுதப்பெற்ற முதல் நூலாகையால், ஆரியக் கருத்துகளை அது முறியடித்துத் தமிழின் பெருமையையும் அறத்தையும் வேறு பிரித்துக் காட்டியது. திருவள்ளுவரே (கி. மு. 3-ஆம் நூற்றூண்டு) அக்கால் வழங்கிய பல வடமொழிச் சொற்களை முதன் முதலாகத் தமிழ்ப்படுத்தித் திருக்குறளை எழுதினர். வேதமதக் கருத்தின் பல கொள்கைகளை முறியடித்தார். அவர் தந்த திருக்குறளில் அக்காலத்தில் புழக்கத்திலிருந்த கீழ்க்காணும் வடசொற்கள் தமிழாக்கப் பெற்று, இடம் பெற்றது குறிப்பிடத் தகுந்தது.

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்	வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
புதல்வர்	மக்கள்	விதி	ஊழ்
அமிர்தம்	அமிழ்தம்	பூமி	நிலம்
கருணை	அருள்	அங்கம்	உறுப்பு
தர்மம்	அறம்	யாகம்	வேள்வி
தர்மநூல்	அறநூல்	சந்தேகம்	ஐயம், ஐயுறவு
நீதி	நயன்	சாதி	பிறப்பு, குலம்
தராசு	துலை	இலக்குமி	செய்யாள், திரு, தாமரையிருள்
பதுமை	பாவை	பயம்	அச்சம்
சத்தியம்	வாய்மை	தேகம்	யாக்கை, உடம்பு, உடல்.

மற்றும் வடலூர் இராமலிங்க அடிகள் (1823—1874) ஆரிய மதத்தின் போலித் தன்மைகளையும், வடமொழியின் போலிப் பெருமையையும் தம் திருவருட்பாக்களால் சுட்டெரித்தார். 1862-இல் வின்சுலோ எழுதிய ஆங்கிலம்-தமிழ் அகரமுதலியும், கு. கதிரைவேல் (பிள்ளை) (1829—1904) அவர்களின் **'தமிழ்ச்சொல் அகராதி'** யும் வெளிவந்தன. இவற்றுக் கெல்லாம் அடிப்படையாக விருந்தது. ஏற்கனவே வீரமாமுனிவர் செய்த **'சதுர அகராதி'** (1732) என்னும் முதல் அகராதி நூலாகும். அதற்கு முன் நிகண்டுகளே தமிழில் வழங்கி வந்தன. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் (1822—1879) தமிழ் மொழிக்கு ஆக்கமான பல நூல்களும் பாடப்பொத்தகங்களும் எழுதினர். மதுரையில் பாண்டித்துரைத் தேவரால் **'தமிழ்ச்சங்கம்'** தொடங்கப் பெற்றது (1901). தமிழ்மக்களிடையே தமிழ்மொழியுணர்வு பரவுவதற்கு இச்சங்கத் தோற்றம் நல்ல வழிகள் பல வகுத்துச் செயற்பட்டன. மாணவர்களுக்குத் தமிழ்த் தேர்வுகளை நடத்தியது. சேதுபதி செந்தமிழ்க் கல்விக் கூடம் நிறுவி, மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து, தமிழ்மொழி கற்பித்தது. பாண்டியன் பொத்தக சாலை நிறுவிப் பல அரிய ஏட்டுச் சுவடிகளைத் தொகுத்து அவற்றை வெளியிட்டது. இச்சங்கத்தின் ஆண்டு மாநாடுகள் தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் நடைபெற்றதால், ஆங்காங்கே இதற்குக் கிளைச் சங்கங்கள் தோன்றி, அவையும் தமிழ் வளர்க்கத் தொடங்கின. இத்தகைய தமிழ்ப்பணிகளால் மக்களிடையில் தமிழுணர்வு பரவத்தொடங்கியது. தமிழில் மொழியியல் ஆய்வுக்கு அடிகோலியது 18-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே வெளிவந்த யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசரின், **'சொற்பிறப்பியல் அகராதி'** யே எனலாம். அதன்பின் இத்துறையில் வெளிவந்த நூல் 1913-இல் மாகறல் கார்த்திகேயனுர் எழுதிய **'மொழி நூல்'** என்னும் ஆராய்ச்சி நூலாகும். இது மொழியியல் துறையில் பெரியதொரு விழிப்புணர்வைத் தோற்றுவித்ததுமன்றி, இவரைத்தொடர்ந்து பலரும் அத்துறையில் ஈடுபடவும் ஆராய்ச்சி செய்யவும் வழிவகுத்தது.

இவற்றை யெல்லாம் அடுத்து, வீ. கனகசபை (பிள்ளை) (1855—1906) அவர்கள் 1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்' என்ற வரலாற்று நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். எம். எசு. பூரண லிங்கனார் (1866—1947) 'தமிழ் இந்தியா' எனும் வரலாற்று நூலை வெளிப்படுத்தினர். பூபாலனார் (1860—1920) அவர்களின் 'தமிழ் வரலாறு' எனும் நூல் வந்தது. த. வே. உமாமகேசுவரனாரால் (1883—1941) கரந்தைத் தமிழ்ச்சங்கம் 1911-இல் தொடங்கப் பெற்றது. இச்சங்கம் தோன்றிய பின் அதன் சார்பில் நடத்தப் பெற்ற கூட்டங்களில் அறிஞர்கள் நிகழ்த்திய தூயதமிழ்ச் சொற் பொழிவுகளும், அவற்றுக்கெனவிடுத்த அழைப்பு, அறிக்கை இவற்றில் கையாண்டிருந்த நல்ல தமிழ்நடையும், தமிழ்மக்களிடை யில் தம் தாய்மொழிப் பற்றும், தூயதமிழ் உணர்வும் வளரத் தூண்டின் றன. கே. எசு. சீனிவாச (பிள்ளை) (1842—1927) என்பாரின் 'தமிழ்வரலாறு' வெளிவந்தது. யாழ்ப்பாணம் விபுலானந்த அடிகள் (1892—1947) 'யாழ் நூல்' என்றோர் அரிய இசைத்தமிழாராய்ச்சி நூலை வெளியிட்டிருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் 'செந்தமிழ்' (1909) என்னும் இதழ் தொடங்கப் பெற்று, அறிஞர் பலரின் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் வெளிவரத் தொடங்கியது. பா. உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஆங்காங்கே கிடைத்த பழம்பெரும் ஓலைச் சுவடிகளை, அரிதின் முயன்று திரட்டி, பலரும் வியக்குமாறு அவற்றை வெளிப்படுத்தியிருந்தார். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து முதலியன இவரின் முயற்சியால் வெளிப்போந்த கழக நூல்கள். இவை வெளிவந்த பின், தமிழர்தம் பழம்பெரும் இலக்கியச் சிறப்புகளும், கலை, நாகரிகப்பண்பாடும் யாவராலும் நன்கு உணரப்பெற்றன. அத்துடன் கலித்தொகை, குறுந்தொகை, அகநானூறு முதலியவை வேறு அறிஞர் பலராலும் வெளிக்கொணரப் பெற்றன, இன்னோரன்ன பலவகையான முயற்சிகளாலும், நூலாக்கங்களாலும் தமிழ்மொழி முன்னையினும் வலிவும் பொலிவும் பெற விளங்கியது. அறிஞர்களுக்குத் தமிழார்வம் கிளர்ந்தெழ, திரவிடர் இனஎழுச்சியால் வடமொழியாளர் மேலும், வடமொழியின் மேலும் ஒருவகை வெறுப்பும் பொதுமக்களிடையில் வளர்ந்து வந்தது.

2 தனித்தமிழ் உணர்வெழுச்சி :

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்மொழியின் வளர்ச்சியில் ஒரு புதுவகைத் திருப்பம் நேர்ந்தது. வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் (1870—1903) அவர்கள், தமிழ் ஆர்வத்தினால் தம் வடமொழிப் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று தூய தமிழில் மொழிபெயர்த்து வைத்துக் கொண்டார். இவ்வகையில் இவரே மற்றெவர்க்கும் எடுத்துக் காட்டாய்த் தனித்தமிழ் உணர்வுக்கு வித்தூன்றினர் என்லாம்.

(தொடரும்)

திருவள்ளுவர் நற்பணி மன்றம்

கோனேரிப் பட்டி.

(வழி) இடைப்பாடி, சேலம் மாவட்டம், நடத்தும்

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

திருக்குறள் தொடர்சொற்பொழிவு

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு **2012,** விடைத்திங்கள் **2-ஆம்** பக்கல் **(15-5-81)** முதல் **12-ஆம்** பக்கல் **(25-5-81)** வரை, சேலம் மாவட்டம் (இடைப்பாடி வழி) கோனேரிப் பட்டி என்னும் காவிரிக் கரையோரச் சிற்றூரில் அங்குள்ள **திருவள்ளுவர் நற்பணி மன்றம், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் திருக்குறள் தொடர் சொற்பொழிவு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. சொற்பொழிவு ஒவ்வொரு நாளும் மாலை **6-30** மணிமுதல் **9** மணிவரை நடை பெறும். இச் சொற்பொழிவை அண்டையயல் ஊர்களில் உள்ள அன்பர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தவறாது வந்து கேட்டுப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். கோனேரிப்பட்டிக்கு ஈரோட்டிலிருந்தும், சேலத்திலிருந்தும் வந்து போக நேராகப் பேருந்துகள் இருக்கின்றன. வெளியூர் அன்பர்கள் தங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றன. சொற் பொழிவு நடைபெறும் பதினொரு நாட்களும் கோனேரிப் பட்டியிலேயே தங்கியிருந்து சொற்பொழிவைக் கேட்டுப் பயன்பெறவிரும்பும் அன்பர்கள் உணவு பெற விரும்பின், திருவள்ளுவர் நற்பணி மன்றத் தாருடன் முன்கூட்டியே தொடர்புகொண்டு ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம்.

தொடர் சொற்பொழிவு விளக்கம்

1. **15-5-81** வெள்ளி — திருக்குறள் — நூல் தோற்றத்திற்கான வரலாற்றுஅடிப்படையும், தேவையும்.
2. **16-5-81** காரி. — திருக்குறள் — அமைப்பியல் விளக்கம்.
3. **17-5-81** ஞாயிறு — குறள் கூறும் வாழ்வியல் கூறுகள்.
4. **18-5-81** திங்கள் — திருக்குறள் அறம்.
5. **19-5-81** செவ்வாய் — திருக்குறள் கூறும் இல்லற அமைப்பு.
6. **20-5-81** அறிவன் — திருக்குறள் கூறும் மெய்ப்பொருளியல்.
7. **21-5-81** வியாழன் — திருக்குறள் அரசு.
8. **22-5-81** வெள்ளி — திருக்குறள் அமைச்சு.
9. **23-5-81** காரி — திருக்குறள் கூறும் குமுகாய வியல்.
10. **24-5-81** ஞாயிறு — திருக்குறள் காமம்.
11. **25-5-81** திங்கள் — திருக்குறள் சமயம் அல்லது திருவள்ளுவம் (நிறைவு விழா)

பிற விளத்தங்கள் அறிக்கைகள் வழி வெளியிடப்பெறும்.

தொடர்புக்கு: திருவள்ளுவர் நற்பணி மன்றம், கோனேரிப்பட்டி, (வழி) இடைப்பாடி, சேலம் மாவட்டம்.

நூல் நிறை

நூல் : **திருக்குறள் நொடி வினா விடை**
ஆசிரியர் : **பேரா. மு. ச. சிவம்.** விலை : **உரு. 10-00.**

பேரா. மு. ச. சிவம் அவர்கள் அரிதின் முயன்று, அமைத்துள்ள 'திருக்குறள் நொடி வினா-விடை' நூல் மாணக்கர்க்குப் பயன்படும் நூலாகும். பள்ளிகளில் குறளில் 'நொடி வினா விடை' அமைக்க உதவும். குறித்த சொற் போக்குடைய, தொடரமைப்புடைய குறட் பாக்களுக்கேற்ற வினாக்களை அறம்-பொருள் என்னுமிரு பால்களுக்கு மட்டுந் தொகுத்துள்ளார்.

'நாள் காட்டி' பற்றிக் குறிப்பிடும் குறள் யாது? என்னும் வினா பொருந்திய தன்று ; தவறான விளக்கத்தையும் அளிப்பதாகும்.

உவமைக் குறட்பாக்களை வினாப்படுத்துங்கால், உவமை-உவ மேயங்களைத் தனித்தமைத்து அதற்குத் தக வினா தொடுத்தலே பொருந்தும். வேறு வகையில் தொடுக்கப்பட்டுள்ள வினாக்களை வருங்காலப் பதிப்புகளில் திருத்திக் கொள்ளல் தகும்.

'மாந்தர்க்கு எப்படிக் கற்றனைத்து அறிவு ஊறும்?' (1290) என்னும் வினாவின் மயக்கம் தெளிதல் நன்று.

இவ்வாறு ஒரு சில குறைகளிருப்பினும், பயனுள்ள இந் நூல் பாராட்டுதற் குரியதாகும். வினா-விடை நூல்களுள் குறளுக்கெனஅமைந்த இதனைத் திருக்குறளன்பர் வரவேற்பாராக.

நூல் : **பன்மொழிப் புலவர். மு ச. சிவம்** விலை : **உரு. 6-00**
ஆசிரியர் : **புலவர் இரா. வடிவேலன், க. மு ,**

பேரா. மு. ச. சிவம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, கல்வி முயற்சி, பெற்ற சிறப்புகள், உற்ற துயர்கள் அவர்தம் பல்வேறு வகை அகர முதலி நூல்களின் தன்மைகள், பயன்கள், அவரது பல் வேறு நிலை நூல் தொகுப்புகள் ஆகியவை பற்றி இரா. வடிவேலன் தெளிவாக எழுதியுள்ளார். திரு. சிவம் அவர்கள் அறிஞர் அ. சிதம்பர நாதனார்க்கு மாணக்கராக இருந்தமையால் தெ. பொ, மீ. அவர்கள் இழைத்த இழிவுகளைப் படிக்கும் போது, நெஞ்சம் கொதிக்கிறது. கல்வித் துறை அலுவலர் திரு. சிவம் அவர்கட்கிழைத்த தீங்குக்குக் கைம்மாறாக இனியவே செய்த சிவத்தின் பண்பு நலம் நம் நெஞ்சைத் தொடுகிறது. நூலின் பிற்பகுதி திரு. சிவம் எழுதியுள்ள பல் வகை நூல்களின் பட்டியலும், அவை பற்றிய குறிப்புகளுமாகும் இனைய நூல்களும் இந்நாள் தமிழகத்திற்கு வேண்டியனவே. தமிழறிஞர்கள் பற்றிய வரலாறுகள் முறைப்படி மக்களுக்கு உணர்த்தப்பட வேண்டும். இந்நிலை இல்லாமையால் தமிழறிஞர் பலரை மக்கள் மறந்து விடுகின்றனர். அறிஞர்கள் வரலாறுகளே நாட்டின் பெரு மைக்கு உண்மையான அணிகலங்களாகும். — **திறனாய்வாளன்.**

நூல்கள் கிடைக்குமிடம் : **மீரா நிலையம். 35. பாப்பாத்திகாடு முதல் தெரு, ஈரோடு-4.**

தமிழ்ப்பாட நூலில் வடமொழி எழுத்துகள் ஏன்?

— சு. கின்னிவேல். க. மு.

தமிழ்ப் பாடநூல் - முதல் வகுப்பில் உயிர் 12, மெய் 18. உயிர் மெய் 216, ஆய்தம் 1 ஆக 247 எழுத்துகளும், கற்பிக்கப் படுகின்றன. இது தமிழ் மொழி பயில்வோர் அறிந்து கொள்ள வேண்டிய எழுத்துகளாம். இவ்வெழுத்துகள் அறிந்தோர் தமிழ் மொழி இலக்கிய இலக்கணங்களைச் செவ்வனே கற்றுணர்தல் முடியும்.

ஆனால் மொழிக்கு எவ்வகையிலும் பொருந்தாத வகையில் தமிழ்ப் பாடநூலில் வட எழுத்துகள், தமிழ்மொழிக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாமல் தேவையற்ற ஐந்தினை அச்சிட்டுக் கற்பிக்கச் செய்கின்றனர். அவை ஐ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்பனவாம். அவற்றைச் சொற்களில் பயன்படுத்தி ஜன்னல், ஸர்ப்பம், வருஷம் போன்றும், காண்பிக்கப் பெற்றுள்ளது.

தமிழ் பயில்வோர் தமிழ்எழுத்துகளும், தமிழ்ச்சொற்களும் மட்டுமே பயிலல் வேண்டும். பிறமொழியாளரும் அவ்வாறே, தமிழ் மொழியில் இல்லாத பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்த அவை வேண்டும் என்போர் சிலர். அவர்க்கு விடை கூறுதும்: வடசொற்கள் தமிழ் மொழியில் வந்து வழங்குகின்றன. அவை தமிழ் மொழியில் எழுதுங்கால் எவ்வாறு எழுதப்படல் வேண்டுமெனின், முதற்கண் அவை தமிழாக்கப்படல் வேண்டும். அடுத்து தமிழின் இயல்புக்கேற்ப திரித்துக் கொள்ளுதல் வேண்டும், எடுத்துக்காட்டு:

ஜன்னல் — தமிழாக்கம்: பலகணி, 'காலதர்'
வருஷம் — தமிழாக்கம்: 'ஆண்டு'

இது செம்மையான முறை. இச் சொற்கள் தமிழ் மொழியில் உள்ளன. அன்றி வட சொல்லை அல்லது பிற மொழிச் சொற்களை அம் மொழிச் சொல்லாகவே பயன்படுத்தக் கருதின் (தேவையில்லை) அவற்றை முறையே ஜன்னல் — சன்னல்; வருஷம் — வருடம் எனவும் வழங்கலாம். வழங்க வேண்டும். எனவே **வட மொழி எழுத்துகள் தமிழ் மொழியில் ஏன்?** இதற்குச் செம்மையான விளக்கம் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் கூறப் பெற்று நெறியும் வகுக்கப் பெற்றுள்ளது

"வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

தொல் — சொல் 401.

பொருள்: சேனாவரையர் கூறும் உரை:

'வடசொற் கிளவியாவது சொற்கே உரியவெனப்படும் சிறப்பெழுத்தின் நீங்கி இரு சார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தானியன்ற சொல்லாம்';

அவை: வாரி, மேரு, குங்குமம், மணி என்பனவாம்,

இவை எழுத தமிழ் எழுத்தே போதுமானது.

வடவெழுத்துத் தேவையில்லை.

மேலும் தொல்காப்பிய நூற்பா.

'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.'

தொல் — சொல் 402 என்பது.

பொருள்: 'பொது வெழுத்தானியன்றனவேயன்றி வட வெழுத்தானியன்ற வட. சொல் சிதைந்து வரினும் பொருத்தமுடையன செய்யுளிடத்து வரையார்''

எடுத்துக் காட்டு: அரமியம், தசம்

இவை வட வெழுத்துக்குரியன. **ரம்யம், தஸம்** என்பன. தமிழில் சிதைந்து வந்து அரமியம், தசம் என நின்றன.

அடுத்து, தமிழ் மொழியின் பயில் இலக்கணமாகிய நன்னூலில் வட சொல் பற்றிக் குறிக்கப்படுவன.

'பொது வெழுத் தானும் சிறப் பெழுத்தானும்

ஈரெழுத் தானும் இயைவன வடசொல்'' ... நன்னூல்.

இந்நூற்பாப் பொருள்: ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலும், ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துத் **திரிந்த எழுத்தாலும்**, இவ்விரண்டு எழுத்தினாலும் செந்தமிழ்ச் சொல்லை யொப்பனவாகி வடதிசையிலிருந்து வந்து வழங்குவன வடசொல்.

எடுத்துக்காட்டு: 1) அமலம், கமலம், மேரு, காரியம்
- பொதுவெழுத்தாலியன்றன.

2) சுகி, போகி, சுத்தி - சிறப்பெழுத்தாலியன்றன

3) சலம் - ஈரெழுத்தால் இயைந்தது.

மேலும் மூன்று நூற்பாற்கள் வழி வடமொழிச்சொற்கள் தமிழில் எவ்வாறு எழுதப்பெறல் வேண்டுமென்பதும் குறிக்கப் பெறுகின்றது.

எடுத்துக்காட்டு: ரங்கன் - ராமன் என்பன முறையே அரங்கன், இராமன் எனவும், ரோமம் என்பது உரோமம் எனவும் எழுதப்பெறல் வேண்டும் என குறிக்கப்பெற்றுள்ளது. வடவெழுத்தோடு எழுதப் பெறல் யாண்டும் குறிக்கப் பெறவில்லை.எனவே வட சொற்கள் தமிழில் வழங்கப்படும்போது அவற்றின் ஒலியே தமிழின் இயல்புக்கேற்ப மாற்றிக்கொள்ளப்படல் வேண்டும் என்கின்ற போது வடவெழுத்துக்கை, ஏன் தமிழ் மொழியில் பயன்படுத்தல் வேண்டும். வடவெழுத்துகளை முதல் வகுப்புப் பாடநூலில் அச்சிட்டுக் கற்பிப்பதும், அவ்வெழுத்தைத் கலந்து சொற்களை எழுதுவதும் தேவையற்ற ஒன்று. மேலும் அவ்வெழுத்துகள் கற்பித்தல் வேண்டும் என்பதற்கு இலக்கிய இலக்கணச் சான்று யாண்டுள்ளது.

தமிழ் எழுத்துகளான உயிர் 12, மெய் 18; உயிர்மெய் 216, ஆய்தம்: 1 ஆக 247 எழுத்துகள் மட்டுமே தமிழ் மொழி பயிலத் தேவையானவை. தமிழ் இலக்கணங்கள் எழுத்து என்ற பகுதியில் சுட்டுவன இவையே. ஏன் வட வெழுத்துகள்? இவற்றைக் கற்பிக்கத் தூண்டியவர் யார்?

வட மொழிச் சொற்களைத் தமிழில் எழுத அவ்வெழுத்துகள் தேவை எனக் கூறுவர். பிற மொழியில் அவ்வாறு கற்பிக்கப் படுகிறதா? எடுத்துக்காட்டு: ஆங்கிலத்தில் 'பழனிவேல்' என்ற தமிழ்ச் சொல்லை எழுத 'ழ' கர ஒலி இல்லை. எனவே அவர்கள் தம மொழியின் இயல்புக்கேற்ப Palanivel என எழுதுகின்றனர் 'ழ' வுக்கு மாறாக அவர்கள் La போட்டு 'ல' ஒலியாக மாற்றி ஒலிக்கின்றனரே அல்லாமல் Pazhnivel என தமிழ் எழுத்தைச் சேர்த்து எழுதுவது இல்லை. தம் மாணவர்க்குத் தம் பாட நூலில் 'ழ' வை அச்சிட்டுக் கற்பிப்பதும் இல்லை.

மேலும் இந்தி மொழியில் 'ஒ' இல்லை. எனவே அவர்கள் தொல்காப்பியம் என்பதை தோல்காப்பியம் எனத்தான் எழுதுகின்றனர். அன்றி, தமிழ் எழுத்தாகிய 'ஒ'வை கற்பிப்பதில்லை.

அவ்வாறிருக்க தமிழில் மட்டும் ஏன் வட வெழுத்துகள் கற்பிக்கப்படல் வேண்டும். அது தமிழின் தனித் தன்மையைக் கெடுப்பதாகும். இதன் வழி ஏராளமான வடமொழிச் சொற்களும் பிற மொழிச் சொற்களும் தமிழ் மொழியில் நுழைந்து மொழிக்கு ஊறு செய்கின்றன. மக்கட் பெயர்களில் பார்த்தோமானால் 100க்கு 90 விழுக்காடு வட மொழிப் பெயர்களாகவே வழங்கக் காண்கிறோம். அண்மைக் காலத்தில்தான் தனித்தமிழ்ப் பெயர்கள் சூட்டப் பெறுகின்றன.

எனவே இந் நிலை வளரவிடப்பட்டால் ஏராளமான வடமொழிச் சொற்களும் வட வெழுத்துகளோடேயே தமிழில் எழுதப் பெற்றுத் தமிழின் தூய்மை கெடுக்கப் பெற்றுப் பிற மொழிக் கலப்பு மிகும். பண்டை இலக்கண இலக்கியங்கள் பொய்யாகவும் அவற்றின் சிறப்புக் குன்றவும் ஏதுவாகும்:

எனவே ஒருவாற்றானும் பொருந்தாத - தேவையற்ற - தமிழின் தனித் தன்மையைக் கெடுக்கும் வட மொழி எழுத்துகள் தமிழ் எழுத்துகளோடு கலந்து பாடநூலில் கற்பித்தல் மறுக்கத் தக்கது. இதுவரை உண்மை உணராமல் - அறியாமையால் நடைபெற்றிருப்பினும் உடன் நீக்கப் பெறல் வேண்டும்.

வடமொழியையோ, பிற மொழியையோ, எழுத்துகளையோ கற்பது தவறன்று. ஆனால் பிறமொழி எழுத்துகள் தமிழ் எழுத்தோடு கலந்து கற்பிக்கப் பெறல் கூடாது. சீர்தூக்கி ஆவன செய்தல் வேண்டும்.

செய்திகள்

1) ஆசிரியர் நடுவக் கூட்டம் - பு. புளியம்பட்டி :

கடந்த 7-3-81 காலை 10 மணியளவில் (கோவை) பு. புளியம்பட்டியில், கிழக்கு, மேற்கு ஆசிரியர் நடுவக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பவானிசாகர் சரகம் பள்ளித்துணை ஆய்வாளர் திரு. **இரா. கோபால்**, க இ; ஆ. ப தலைமை தாங்கினார். பாவலர் திரு. **குமர நடவரச ஈவப்பனார்** உரைக்குப்பின், தமிழீழ விடுதலைக் கூட்டணி, செயற்குழு உறுப்பினர் திரு. **ஈழவேந்தன்** அவர்கள் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்ட முயற்சிகள் பற்றி, அரிய வரலாற்றுச் சான்றுகளுடன் சிறப்புரையாற்றினார். இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** 'தமிழின் தனிச்சிறப்பு' என்னுந் தலைப்பில் அரியதோர் ஆய்வுரை நிகழ்த்தினார். ஆசிரியர்களிடையில் இச சொற்பெருக்கு நல்ல விளைவைத் தந்தது.

2) அரங்க-தமிழ்மணி-செல்வி (இலக்குமி) வாழ்க !

சென்ற கும்பம் 25 8-3-81) அன்று காலை கோவை இருகூரில் கோ. வ. தென்மொழி இயவ அமைப்பாளர், திரு. **அரங்க தமிழ்மணிக்கும்**. **செல்வி** எனும் இலக்குமிக்கும், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில் தமிழ்த்திருமணம் இனிதே நடைபெற்றது. திருவாளர்கள் பாவலர் **குமர நடவரச ஈவப்பனார்**, அறிஞர் **கு. வெ. கி. ஆசான், க இளமுருகனார்**, தென்மொழி **ந முத்துக்குமரனார்** ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். திரு. **ஈழவேந்தன்** மணமக்களை வாழ்த்து முகத்தான், தமிழீழ விடுதலைக் கொள்கைகளையும் நோக்கங்களையும் பற்றி உரையாற்றினார். இறுதியில் மணமகன் நன்றி கூறினார்.

3) திருக்குறள் மன்ற மூன்றுமாண்டு நிறைவு விழா பல்லடம் :

பல்லடம் திருக்குறள் மன்ற 3-ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த கும்பம் 25 (8-3-81) அன்று மாலை 6 மணியளவில் பல்லடம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழி எழுதுங்காலும் வடவெழுத்துகளைக் கலந்து எழுதுதல் கூடாது. தமிழ் எழுத்துகளை மட்டுமே கொண்டு எந்தச் சொல்லையும் எழுதுதல் வேண்டும். இது தமிழ் மொழி பயில்வோரின் நீங்காக் கடமையாகும். தமிழ் உணர்வு உடையோர் உடன் சிந்தித்துச் செயல் படுவாராக.

அரசு இவ்வாண்டு முதல், முதல் வகுப்புப் பாட நூலில் வடவெழுத்துகளை நீக்கிப் பதிப்பிக்கும் என நம்புவோமாக. ○

பொங்காளியம்மன் கோயில் திடலில் பாவாணர் அரங்கில் சிறப்புற நடைபெற்றது. தொடக்கத்தில் பூங்குயில் இசைக் குழுவினரின் தமிழிசையரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, புலவர் சிவத்திரு. **கா. கு. சிவாச்சலம்** அவர்கள் தலைமை யேற்றனர். தென்மொழி **ந. முத்துக்குமரனாரின்** வரவேற்புரையை அடுத்து திரு. **ஈழவேந்தன்** அவர்கள திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப பரிசளித்து, தமிழீழ விடுதலைப் போராட்ட நோக்கங்களையும் தேவைகளையும பற்றி அரியதோர் உணர்வுரை யாற்றினர். அவரையடுத்து, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**'தமிழில் வழிபாட்டுரிமை' என்னுந் தலைப்பில் சிறப்புரை யாற்றினர். இரவு 11 மணியளவில் நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

4) இலக்கிய மன்ற ஆண்டு விழா : அரசு மேனிலைப் பள்ளி. பல்லடம் :

கடந்த 9-3-81 காலை, பல்லடம் அரசு மேனிலைப்பள்ளியின் இலக்கிய மன்ற ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, பாவலர் திரு. **குமர நடவரச ஈவப்பனர்** தலைமை தாங்கினர். பள்ளித் தலைமையாசிரியர் முத்தமிழ்க கொண்டல் திரு. **யு. எம். அப்துல் இரவூப்** ச. மு; ஆ. ப. வரவேற்புரையாற்றினர். மருத்துவர் திரு. **கே சுந்தரராசன்** மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**, 'தமிழ் ஓர் அறிவியல் மொழி' என்னுந் தலைபபில் சிறப்புரை யாற்றினர். நன்றியுரைக்குப்பின் விழா இனிது நிறைவுற்றது.

5) இலக்கிய மன்ற நிறைவு விழா. அரசு மேனிலைப் பள்ளி காங்கேயம் :

சென்ற 9-3-81 பிற்பகல் 3-30 மணியளவில், காங்கேயம், அரசு மேனிலைப் பள்ளி, இலக்கிய மன்ற நிறைவு விழா, பாவலர். **குமர நடவரச ஈவப்பனர்** தலைமையில் நடைபெற்றது. பள்ளித் தலைமையாசிரியர் திரு கு. **ஆறுமுகம்** க இ; ஆ. ப. வரவேற்புரை யாற்றினர். பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்குத் தலைவர் பரிசுகள் வழங்கிய பின், **பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'பாவேந்தர் பைந்தமிழ்'** என்னுந் தலைப்பில் சிறப்புரை யாற்றினர்.

6) திருவள்ளுவர் முத்தமிழ் மன்றம் : முதலாண்டு நிறைவு விழா ; சேசசாயி தாளாலைக் குடியிருப்பு: பள்ளிபாளையம், ஈரோடு.

கடந்த 25-3-81 ஞாயிறு மாலை 7 மணியளவில், ஈரோடு, பள்ளிபாளையம், சேசசாயி தாளாலைக் குடியிருப்புப் பகுதி, திருவள்ளுவர் முத்தமிழ் மன்றத்தின் முதலாண்டு நிறைவு விழா, 'குறளியம்'

ஆசிரியர், திரு **வேலா இராசமாணிக்கம்** அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. அக்கால் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** மன்றத் திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கித் 'திருக்குறள் மக்கள் வாழ்க்கைக்கு ஏன் தேவை' என்னும் பொருள் பற்றிச் சிறப்புரையாற்றினர். இவ்வுரை தாளாள அதிகாரிகள் உள்பட அனைவரையும் பெரு மகிழ்ச்சியுறச் செய்தது குறிப்பிடத்தக்கது.

7) செங்கை மருத்துவக் கல்லூரி முத்தமிழ் விழா :

கடந்த 16-3-31 செங்கழுநீர்ப்பட்டு மருத்துவக் கல்லூரியில் முத்தமிழ்விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. முதல்நாள் இயற்றமிழ் விழா பேரா சி. ஆர். கோபால கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. திரு பெவின் இலாரன்சு அறிக்கை படித்தார். அதன்பின் **பாவலரேறு பெஞ்ருசித்திரனார்** சிறப்புரையாற்றினர். திரு. ஔவை நடராசன் தலைமையில் பட்டி மன்றம் நடந்தது. பட்டி மன்றத்தில் அறிஞர் பலர் கலந்து கொண்டனர்.

8) சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பாவலரேறு :

சென்ற 19-3-81 அன்று 8-15 மணியளவில் சென்னை, தொலைக் காட்சியினர் நடத்திய வண்ணக் களஞ்சிய நிகழ்ச்சியில், கழக எழு வள்ளல்கள் — அதியமான் பற்றிய நாடகம் ஒன்று நடந்தது. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அதில் கலந்து கொண்டு ஆய்வு முன்னுரை நிகழ்த்தினர்.

9) தென்மொழி மன்றம், போர்ட்டுபிளேயர், அந்தமான்:

அந்தமான் போர்ட்டு பிளேயரில், சென்ற பிப்ரவரி 21-இல் தென்மொழி மன்றம் தொடங்கப் பெற்றது. ஆழ்ந்த மொழிப் பற்றும், தெளிந்த சிந்தனையும் துணிவும், நெஞ்சுரமுமிக்க அறிவு சார்ந்த இளைஞர் கூட்டத்தின் அமைப்புதான் **தென்மொழி மன்றம்.** தன்மான உணர்வுகளை வளர்த்தல், தூய தமிழ்ப்பணி ஆற்றுதல், அரசியல், பொருளியல், குமுகாய நிலையில் தமிழினத்திற்கு இடையில் நடந்துள்ள, நடந்து வருகின்ற ஊடுருவலைத் தடுத்தல், அதே நேரத்தில் தீவின் எல்லா இன மக்களிடமும் தோழமையை வளர்த்தல் ஆகிய நோக்கங்களுக்குப் பாடுபட இம்மன்றம் உறுதி பூண்டுள்ளது. அமைப்பாளர்கள் வருமாறு: காப்பாளர் : மணிமொழியன், தலைவர் திரு. இ. இன்சொலன், அமைச்சர்கள், திருவாளர்கள் இளவல், சு. தமிழ்நெஞ்சன், பொருளமைச்சர் தென்மொழி இரா. தமிழ் நாட்டான், செயலர்கள் திருவாளர்கள் ம. எரியோன், ம தமிழ்க் கனல், தமிழரசன், இரும்பொறை, இளஞ்செழியன், மதிமாறன் ஆகியோர். மன்றத்தின் முதல் செயலாக, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களைத் தீவுக்கு அழைத்து நிகழ்ச்சிகள் நடத்துவது என்று முடிவு செய்யப் பெற்றது.

எழுதுகிறது. இந்நிலையில் தூயதமிழைத் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு குறளியம், தமிழ்ச்சுடர்** வாயிலாக அறிகிறோம். நாளிதழ் ஒன்றைத் தொடங்க வேண்டுகிறேன். மாதம் ஒரு முறை வரும் தென்மொழியை எத்தனைப் பேர் படிக்கிறார்கள்? அன்புநிறை,

— **தென்னவன்**, மேலைச்சிவபுரி.

0:830: பாவலரேறு ஐயா, வணக்கம். நடந்து முடிவுற்ற 5-ஆம் உலகத் தமிழ் மாநாட்டில், கடைசி நேரத்தில் தங்களைப் புறக்கணித்தது அறிந்து ஆறாத மனத்துயரம் அடைந்தேன். தாங்கள் பிரிவினை கேட்பவர் என்பதால் புறக்கணிக்கப்பட்டதாக அறிந்தேன். அஃது உண்மையாக இருப்பின், பிரிவினை பேசுகிறவன் தமிழ் அறிந்திருக்கக் கூடாதா? அவன் அறிந்தவற்றை எடுத்துரைக்கக் கூடாதா? சிறைக்குற்றவாளிகள் கல்லூரித் தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படும் காலமன்றோ இது! குற்றம் அற (நீதி) மன்றத்தால் மெய்ப்பிக்கப்பட்டால்தான் ஒருவன் குற்றவாளியாகிறான். எக் குற்றமும் செய்யாத தங்களைப் புறக்கணித்ததற்குத் தாங்கள் விடுத்துள்ள அறிக்கை முற்றிலும் சரியானதே! சென்னைக் 'குதிரைவீரன்' சிலையை மதுரைக்கு எடுத்து செல்லப் போவதாகக் கூறி, கலைஞர் அவராகவே உ. த. மாநாட்டில் கலந்து கொள்ளாத சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள்.

'மலேசியாவில் தமிழர்கள் முன்னேறுவது ஏன்? எப்படி? என்ற ஆய்வுக்கட்டுரையை, உ. த மாநாட்டில் திரு டேவிட் (மலேசிய பாராளுமன்ற உறுப்பினர்) படித்தார். இலங்கைத் தமிழர் நிலை பற்றி அந்நாட்டு எதிர்க் கட்சித் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் பேசும்போது தமிழ்நாட்டு முதலவர் கண்டனம் தெரிவிக்கிறார். ஏன் இந்த முரண்பாடு? உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் உறுப்பினர்களைப் புறக்கணித்துவிட்டு, மிகப்பல வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களை அவமதித்ததற்காகவே மாநாட்டு ஏற்பாட்டாளர்களைக் கண்டித்தாக பர். சாலை இளந்திரையன் அவர்கள் (13-1-81 தினமணி இதழில்) குறைப்பட்டு அறிக்கை விட்டிருக்கிறார். இந்திய நாட்டுத் தலைமை அமைச்சர் வருகிறார் என்பதற்காகச் சேரன் செங்குட்டுவனின் வீரத்தைத் திரை போட்டு மறைத்தது எப்படிச் சரியாகும்?

— **துப்பாக்கி தி. அன்பழகன்** (க. இ.) திருச்சி-16.

0:831: ஞாயிறு ஒவ்வொருநாளும் தோன்றுகிறது; மறைகிறது. இல்லை, மறைவது போன்ற தோற்றம் தானே தவிர, உலகம் சுழல்கிறது! தமிழனுக்கு, தமிழுக்குத் தம்முடைய இறுதிமூச்சுவரை பாடுபட்ட மொழிஞாயிறு மறைந்துவிட்டது போன்ற எண்ணம்! சாக்காடு தழுவாத வரலாற்று நாயகனுகிவிட்ட பாவாணர் ஐயா அவர்களின் உடலைக் கொன்று விட்டனர். அவருடைய எண்ணங்களைக் கொன்றுவிட வில்லை, முடியாது. தமிழ்க் குமுகாயம் என்று முன்னேற்றமடையப் போகின்றது என்று ஏங்குகின்றோம்! அந்நாள் எந்நாளோ?! இதற்கு இறுதியிட்டுக் கூற வேண்டும்; அதுதான் எந்தமிழன் வீறுகொண்டு இந்தியா என்பதிலிருந்து, தன்னை விடுவித்துக் கொள்ளும் நாளே அந்நாள்! உலகத்தமிழ் மாநாட்டிலே(!) பந்தயச் சாலைத் திடலிலே மொழிஞாயிறு அவர்கள் மாந்தனின் தோற்றத்தைப் பற்றித் தெளிவான விளக்கவுரை ஆற்றுகின்றார். வேகமான பேச்சு! அதனிடையே 'தமிழனின் சிறப்பும், திரவிடத்தின் வீழ்ச்சியும் ஆரியப் பார்ப்பனர்களின் வருகைக்குப்பின் தான்

என்கிறார். உடனே ஒரு கும்பல் கையொலியும், கூச்சலுமிடத் தொடங்கி இடைவிடாது தொல்லை கொடுக்கின்றனர். ஐயா அவர்கள் இருக்கையிலே அமர்கின்றார். சிறிதுநேரத்திலே நெஞ்சுவலி என்று மருத்துவமனை கொண்டு செல்லப் படுகின்றார். அவர் இறுதி மூச்சு விடும் நேரத்திலே என்னென்ன நினைத்தாரோ ? ஏடா ! தமிழா, என்று உன் நிலை உயருமோ ?! இல்லை நீ உணர்வற்ற, சோற்று லடித்த பிண்டமாகவே இருப்பாயோ ! உனக்கு என்று சூடு சொரணை வரப்போகிறதோ? இல்லை வராமலே போய் விடுமோ?! என்று இறுதி மூச்சினை விட்டு எங்களை ஆராத்துயரினில் ஆழ்த்திச் சென்றனையோ ஐயா, ஐயகோ; உங்களையும் காவு கொண்டு விட்டனரே ! இன்னுந் தான் நாங்கள் உயிரோடு உலவுகின்றோம் ! ஐயா. தமிழ்ப்பகையைக் கருவோடு அழிக்கும் நாள் நெருங்கிவிட்டது. தமிழனுக்கு விடி வெள்ளி தோன்றிவிட்டது. என்றும், எதற்கும், எதையும் இழக்க உறுதி பூண்டு விட்டோம் உங்கள் மீது ஆணை! தமிழ் மீது ஆணை! என் தமிழ் இனத்தின் மீது ஆணை!!! எங்களைப் பொறுத்துக் கொள்க தமிழ்ப் பெருங்கடலே. தமிழன் உயர்வுக்கு எதையும் செய்யும்,

— **மருவி. தமிழ்நம்பி**, புதுத்தாமரைப்பட்டி, (மதுரை.)

0;832: தமிழர்களின் வரிப்பணத்தில் உருபா 13 கோடியை மதுரையில் கொட்டியது வெற்றுக் கழிப்பிடங்களுக்காகத்தான். தமிழ் தமிழன் என்று கூறிக்கொண்டே அரசியல் வாணிகம் நடத்தும் ம. கோ. இரா. அவர்கள் நடத்தியது உலகத்தமிழ் மாநாடு என்ற பெயரில் அ. தி. மு. க. மாநாட்டை நடத்தியுள்ளார்.

தனித்தமிழ் இயக்கத் தலைவரான தமிழரிமாவான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்குக் கொடுக்கப் பெற்ற நிகழ்ச்சியைத் திடீரெனப் புறக்கணித்து விட்டு அந்நிகழ்ச்சியில் 'அ. தி. மு. க. பேராசிரியர்'' ஒருவரைப் போட்டுள்ளதைக் கண்டித்துக் **கோவை தென்மொழி இயவ**த்தின் சார்பில் 8-1-81ஆம் பக்கல் முதல் வருக்குத் தொலைவரியும் கொடுக்கப் பட்டுள்ளது. இதே போன்று மதுரை மாநாட்டிலும் கண்டனத்துண்டறிக்கை வெளியிட்டதைத் தொடர்ந்து தென்மொழி அன்பர்கள் மூவரைத் தளைப்படுத்தியதுடன் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வீட்டையும் ஆய்வு நடத்திச் சில புத்தகங்களையும் எடுத்துச் சென்றுள்ளதைப் பார்க்கும்போது காவல் துறையினரும் ம. கோ. இராவால் அறிவு மயங்கி விட்டனரோ என்று ஐயப்படுமாறு உள்ளது.

'கோப்பையில் குடியிருக்கும் கூவத்துப் பாவலர்கள் எழுதும் காமக்களியாட்டங்களையும், பெண்களை விளம்பரப் பொருளாக அட்டைப் படத்தில் போட்டும்; எழுதியும், பேசியும் வருகின்ற புத்த கங்கள் அரசுக்கு வேண்டிய புத்தகங்களாம் ! தமிழ்மொழி, இனம், நாடு பற்றிய உண்மைகளை எழுதுவது அரசுக்கு 'விரோத' மானவை யாம்' அந்தோ ? சாக்கடைப் புழுக்களே உமக்குப் பெயர்தான் **அ.** தி. மு. க. அரசோ !

— **தென்மொழி அரங்க. தமிழ்மணி**, வயவர்,
தென்மொழி இயவம், கோவை-15.

தென்மொழி மின் அச்சகம், சென்னை (தமிழகம்) 600005.